
ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**April - June 2014**

ஜய வருட
சித்திரை - ஆனி 2014
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



காவாய் ஆதீன முதல்வர்
சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள்

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

HOMELIFE
HIGHER STANDARDS

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8
905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229

---

## வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**



NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!




வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**
416-993-8443
905-471-3058




உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம்: 1948

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 15:
இதழ் 2
ஜய வருடம்
சித்திரை - ஆனி
திரு. ஆண்டு -2045
ஆங்கில ஆண்டு 2014



**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம் பக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 3 |
| நமது உள்ளுணர்வை எழுப்புதல் | 4 |
| மானிடப் பிறவியின் மாண்பு | 9 |
| பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி | 13 |
| திருமந்திரத்தில் அரசாட்சிமுறை | 17 |
| சைவசித்தாந்தமும் அறிவியலும் | 21 |
| துடக்கு என்னும் ஆசௌச விளக்கம் | 26 |
| வடமொழியில் திருவாசகம் முழுவதும் | 28 |
| இந்திய திருத்தல யாத்திரை 2013 | 30 |
| ஓட்டைப்பானை | 35 |
| வைராக்கியத்தின் சிகரம் வாகீசர் | 39 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 41 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

# வரலாற்று நிகழ்வு

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் வரலாற்றில் 13.04.2014 ஞாயிற்றுக்கிழமை ஒரு மைல்கல் நாளாகின்றது.

ஈழத்து மாமுனிவரும் சற்குருவுமாகிய யோகர்சுவாமிகள் இறைபதம் எய்தி 50ஆவது ஆண்டு மகாகுருபூசையை முன்னிட்டு அவரது வழிவந்த சற்குரு போதிநாத வேலன்சுவாமிகள் சைவக் கனடியரின் அழைப்பை ஏற்றுக் கனடா வருகைதந்திருந்தார்கள்.

சுவாமிகளை அவரது நற்றொண்டர் திரு. சற்குணேந்திரன் பேரவையின் தலைமைத்தளமாகிய ஆத்மஜோதி இல்லத்துக்கும் ஏப்பிரல் மாதம் 13ஆம் திகதி அழைத்து வந்தார். காலை 8.45 மணியில் இருந்து 10.00 மணி வரை சுவாமிகள் எமது இல்ல வழிபாட்டிற் கலந்துகொண்டு அருள் உரையும் நிகழ்த்தினார்கள்.

கடவுள் எங்கு இருக்கின்றார்? அங்கு இருக்கின்றாரா! இங்கு இருக்கின்றாரா! என்று தேடி அலையாதீர்கள். அவர் உங்களுடனேயே இருக்கின்றார், உங்களுக்கு உள்ளேயே இருக்கின்றார். அவரைக் கண்டறிய முயலுங்கள். கண்டறிவதற்கு தியானம் செய்தல் ஒரு சிறந்த வழி' என்று இலகுவான நடையில், யாவருக்கும் விளங்கும் வகையில் அழகாகப் பேசினார்.

தொடர்ந்து, எமது பேரவைத் திருக்கூட்டத்தவர் மற்றும் சுவாமிகளைத் தரிசிப்பதற்கென்றே வந்துகூடிய அடியவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி திரு நீறணிந்து ஆசீர்வதித்தார்கள். அது அவர்கள் எல்லோருக்குமே ஓர் அரிய பேறாகவும் அற்புத அனுபவமாகவும் அமைந்தது.

நேரடித் தரிசனம், ஆன்மிக அருளுரை, ஆசீர்வதிப்பு போன்றவற்றால் சைவ உலகத்தில் நல்லுறவை வளர்த்து வருகின்ற காவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் சிவயோகசுவாமிகளின் போதனைகளை உலகெலாம் பரவும்வகை செய்வதையும் தமது குருபரம்பரையை முன்னிலைப் படுத்துவதையும் இறைபணியாகக் கொண்டவர்.

அவரை முதல்வராகக் கொண்டு நாமும் எமது உள்ளப் பக்குவத்தை வளர்த்து உய்தியடைவோமாக!

- வி. கந்தவனம்

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

## வி. கந்தவனம்

### கோமாரி

### சங்கமான்கண்டிப் பிள்ளையார்

பதியானார் பலவுயிர்க்கும் பாச மானார்
பசுவானார் பாலானர் நெய்யு மானார்
முதலாக அடியார்கள் முயற்சிக் கெல்லாம்
முன்னிற்க வெனப்பெற்ற மூத்த பிள்ளை
கதிர்காமம் எழுந்தருளும் தம்பி கந்தன்
கழல்காண யாத்திரைசெய் காத லார்க்குக்
கதியாகச் சங்கமான் கண்டி நாடிக்
கருணைபுரி பிள்ளைகழல் காவ லாமே. (131)

### கதிர்காமம்

### செல்வப் பிள்ளையார்

ஞானவடி வானவரை ஞானி கட்கு
ஞானகுரு வானவரை விமல ஞானம்
ஆனகனி பெற்றவரை ஆதி தேவை
அன்பர்பொருட் டெழுந்தெங்கும் அருளு வோரை
அனைமுக மானவரை ஆண வத்தை
அடக்கியருள் செய்பவரை அடர்த்தி மிக்க
கானமதில் வானகத்தைக் காட்டுஞ் செல்வக்
கதிர்காமந் தனிற்கண்டு கதிபெற் றேனே. (132)

### கல்முனை – பாண்டிருப்பு

### மாணிக்கப் பிள்ளையார்

சொன்னபடி சூரனைமுன் கொன்று தேவர்
தொல்லைகளைத் துடைத்தசெயல் வீர ராவர்
கன்னலினை விரும்புகின்ற கருணை யாளர்
கல்முனைசேர் பாண்டிருப்பிற் கலிங்க நாட்டு
மன்னசிங்கன் காலம்முதல் மகிழ்ந்து வைகும்
மாணிக்கப் பிள்ளையாரின் வார்க ழல்கள்
உன்னியெழும் அடியவர்நல் லொழுக்கஞ் செல்வம்
உயர்கல்வி புகழெய்தி ஓங்கு வாரே. (133)

# நமது உள்ளுணர்வை எழுப்புதல்

காவாய் ஆதீன முதல்வர் போதிநாத வேலன் சுவாமிகள்

தமிழாக்கம் கவிநாயகர் வி. கந்தவனம்

உள்ளுணர்வின் உபயோகம் குறித்து பரமகுரு யோகர்சுவாமிகள் விவரிப்பதை உங்களோடு பகிர்ந்து கொள்வதன்மூலம் நான் தொடங்கவிரும்புகிறேன். "உள்மனக் கட்டளை"ப்படி வரும் அடியார்களுடன் யோகர்சுவாமி உள்ளுணர்வுடன் பணி யாற்றினார்.

இதன் செயற்பாடு குறித்து விளக்கும்போது அவர் ஒருமுறை, "நான் ஒன்றுமே செய்வதில்லை. நான் எதையுமே செய்ய இயலாது. நீங்கள் பார்ப்பது எல்லாம் உள்ளிருந்து வருவதால் ஏற்படுவதே" என்றார். இதேபோல் இன்னொருமுறை அவர் கூறியதாவது: "நீங்கள் இங்கு வரும்போது என்ன நடக்கும் என்பது எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். நாம் அதன்படி செயற்படுகிறோம். நீங்கள் கொண்டுவருகிறீர்கள். ஆனால் அது எப்பவோ முடிந்த காரியம். உட்கார்ந்து கொண்டு சாட்சியாக இருங்கள்." சுவாமி அந்தச் செயற்பாட்டை மீண்டும் விளக்கினார். "நீங்கள் தூய்மையாக இருந்தால் தாமரை இலைமீதுள்ள தண்ணீர்போல் வாழ்வீர்கள். எது உங்களைத்தேடி வருகிறதோ அதற்குத் தேவையானதை செய்யுங்கள். பிறகு அடுத்த கட்டளை யை ஏற்று செயற்பட்டு, பின் அடுத்த கட்டளை கிடைக்கும்வரை காத்திருங்கள்"

"உள்மனதில் கட்டளை பிறந்ததும் தைரியமாகச் செயற்படுங்கள்." என்று சுவாமிகள் கூறுவார். "எல்லா விவரங்களும் கிடைக்கும்வரை காத்திருக்க வேண்டும் என்பதில்லை. எல்லாம் சரியாக வரட்டும் என்று காத்திருந்தால் வாய்ப்பை இழக்கக் கூடும். நம்பிக்கை வைத்து உள்மனதின்படி பணியாற்றுங்கள். தெய்வீக கட்டளைப் படி நடந்தால் பணம் உங்களைத்தேடி வரும். உதவி உங்களை நாடி வரும். எல்லாமே வரும். உங்களுக்குள்ளே உதிப்பதை மட்டும் நீங்கள் கவனமாக பின்பற்றவேண்டும்." என்று சுவாமிகள் விளக்குவார்.

---

பிறர்க்கு இன்பம் உண்டாகும் வகையில் நாம் வாழ்ந்தால்

நம்முள்ளே இருக்கும் மனக்குரலை எப்படி கண்டுபிடிப்பது என்று கேட்டபோது சுவாமிகள், "சும்மா இரு. சும்மா இரு. சும்மா இரு. எது தேவையோ அது உங்களைத் தேடி வரும்" என்றார்.

சும்மா இரு என்பதே எப்பொழுதும் அவரின் கட்டளையாக இருந்தது. அதை அவர் எப்போதும் கடைப்பிடித்து அதன்படி நடந்துவந்தார். இதே கருத்தை குருதேவரும் முன்னர் கூறியிருக்கிறார். யாராவது ஒருவர் ஒரு கேள்வி கேட்பார், குருதேவர் தன் உள்மனக் கட்டளைக்காக சற்று நேரம் காத்திருப்பார். கட்டளை கிடைக் காதவரை ஒன்றுமே செய்யமாட்டார். ஒருமுறை நகரில் நடந்து கொண்டிருந்த சுவாமிகளிடம் ஒருவர் காரை நிறுத்தி எங்காவது போக வேண்டுமோ என்று கேட்டார். "கட்டளை இல்லை" என்று சொல்லி அவரைப்போகச்சொல்லி கையசைத்துவிட்டா சுவாமி. சில நிமிடங்கள் கழித்து அதே காரோட்டி மீண்டும் வந்து காரை சுவாமிமுன் நிறுத்தினார். "இப்பொழுது கட்டளை ஆச்சு" என்று கூறி சுவாமி காருக்குள் ஏறிக்கொண்டார்.

சற்குரு சிவாய சுப்பிரமுனியசுவாமி அவர்கள் தன் 'சிவத்தோடு ஐக்கியமாதல்' என்ற புத்தகத்தில் உள்ளுணர்வை விவரித்து ஒழு முழு அத்தியாயமே எழுதியிருக்கிறார். அதில் குறிப்பிட்டிருப்பதாவது:

"உள்ளுணர்வு ஒவ்வொருநாளும் விட்டுவிட்டு ஏற்பட்டாலும் கண்டிப்பாக அது ஏற்படுகிறது. நம் மனப்பகுதிகளின் உள்ளு ணர்வு இயக்கங்களை முறையாக கவனித்து உள்ளுணர்வு சக்தி எப்போது நிகழ்கிறது என்பதை நம்மால் அறிந்துகொள்ள இயலும். எதிர்காலத்தில் நிகழப்போகும் நிகழ்வுகளை நாம் முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் நம்மிடம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அதுபோலவே ஆபத்து வருவதற்கு முன்னே மனதில் ஒரேநேரத்தில் இனந்தெரியாத பயம் சூழ்ந்துகொள்வதையும் நாம் அறிவோம்.

---

பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை
தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்

எது உள்ளுணர்வு, எது உள்ளுணர்வு அல்ல என்பதை அன்றாட அனுபவத்திலேதான் ஒருவர் இனந்தெரிந்து கொள்ளவேண்டும். அப்படி செய்வதன்மூலம் மிகப்பெரிய தன் மனப்பகுதியில் அன்றாட அனுபவத்தில் நிகழும் உள்ளுணர்வுசக்தி எது என்பதை அறிந்துகொள்ள இயலும்.

உள்ளுணுர்வுசக்தி யாண்டும் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது என்பதை ஒரு இரைச்சல் மிகுந்த அறையில் மெல்லிய இசை இசைப்பதை ஒரு உதாரணமாக நாம் எடுத்துக்கொள்ளலாம். இசை இசைத்துக்கொண்டுதான் இருக்கிறது ஆனால் பெரும் இரைச்சல் சத்தமாக இருப்பதால் நம்மால் அந்த இசையைக் கேட்டகமுடிவதில்லை. அதுபோலத்தான் நம்முடைய மனதுக்குள்ளேயும், மனதுக்குள் தொடர்ந்து எழும் எண்ணங்களும் உணர்வுகளும் நம்முடைய மனக்குரலைக் கேட்பதினின்று நம்மைத் தடுக்கின்றது. ஆனாலும் சிலவேளைகளில் மிகுந்த சத்தத்திற்கிடையேயும் நம்முடைய மனக்குரல் வேகமாகக் கேட்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆபத்து நேரிடும்போது இப்படி நடக்கலாம். வெளியே விளையாடிக்கொண்டிருக்கும் தன் குழந்தைக்கு ஏதோ ஆபத்து ஏற்படப்போகிறது என்பதை உள்ளுணர்ந்து தாய் ஓடிப்போய் உடனே குழந்தையைக் காப்பாற்றுவது என்பதை இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

உள்ளுணர்வை அடையாளங்கண்டுகொள்ளும் தன்மையை நாம் அதிகரித்துக் கொள்ளும் சூட்சுமத்தை குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள் சிவனோடு ஐக்கியமாதல் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ‘‘உள்ளுணர்வு மனப்பகுதிகளை கட்டவிழ்த்தல்’’ அல்லது “உள்ளுணர்வை மேம்படுத்துதல்” போன்ற வார்த்தைகளை நாம் அடிக்கடி உபயோகித்தாலும், அவையாவும் ஆன்மீகப் பாதையில் போய்க்கொண்டிருக்கும் ஒருவனை, தன் அறிவை அடக்கி, உள்ளீடாய் மொத்தமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் தன் உள்ளுணர்வு மனத்தைக் கவனிக்க ஊக்குவிக்கும் ஒரு முயற்சியே.

---

நல்ல செயலுக்கு இயற்கை இடம் தருகிறது
வாழ்க்கைப் பாதைக்கு நல்லறிவே கைவிளக்கு

“அன்றாட வாழ்வியல் நியமங்களின் தொகுப்பும், மொத்த எண்ணங்களினால் உருவான அறிவு மனத்தை அடக்குவதற்கு முதலில் நம் அறிவுமனம் எப்படி செயற்படுகிறது என்று உள்ஒர நாம் கவனிக்க வேண்டும். கவனிப்பது என்பது உள்ளுணர்வு மனத்தின் ஒரு பகுதியாகும். நீண்டகால தியானத்திற்குப் பிறகுதான் நான் விளக்கிய இந்தக் கவனிப்பு பயன்பாட்டுக்கு வரும்.

கவனிப்பதன் முக்கியத்துவம் தெரிந்தபின் இயல்பாகவே கவனிக்கும் தன்மையை எப்படி வளர்த்துக்கொள்வது என்ற கேள்வி எழும். அதை குருநாதர் இப்படி விளக்குகிறார். “மெய்யுணர்வு மனத்தை தட்டியெழுப்பும் முதல் அங்கமே இந்த கவனிக்கும்தன்மை. அதிகம் பேசுவதிலிருந்து விலகிநிற்பதன்வழி இந்த கவனிக்கும் தன்மை வளர்க்கப்படுகிறது. அதிகம் பேசுவதால் நம் உள்மனத்தின் சுமை அதிகரிக்கிறது. இதனால் நம் மெய்யுணர்வு வெளிப்பட அதிக சிரமமாகிறது.

அவர் மேலும் விளக்குவதாவது:

“வீட்டின் அடித்தளத்தில் தேவையற்ற பொருட்களை அடைத்து வைத்திருந்தால் நிலமை எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். வீட்டின் இந்த அடித்தளத்தை நம் உள்மனத்தோடு ஒப்பிடலாம். வீட்டில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பொருள் களைப்போலவே நம் எண்ணங்களும் சொற்களும் உள்மனதில் அடைபட்டிருக்கின்றன. முழு வீட்டுக்கும் வெப்பம் ஊட்டிவிட வீட்டின் அடித்தளத்தின் புகைக்கூண்டு உதவுகிறது. மெய்யுணர்வு மனமும் இந்த புகைக்கூண்டை போன்றதே. வீட்டின் அடித்தளம் மிகவும் நெருக்கடியாக இருந்தால் புகைக்கூண்டுமூலம் நெருப்பேற்றி வீட்டிற்கு வெப்பம் ஊட்ட இயலாமற் போகலாம். அது போலத்தான் உள்மனத்தின் அடித்தளமும் மிக நெருக்கடியாக இருந்தால் மெய்யுணர்வு வெளிப்படாமல் போகலாம். அமைதியான மனம் புரிந்துணர்வுக்கு வழிவகுக்கிறது.

உள்ளுணர்வை அடைவதற்கு யோகர்சுவாமிகளின் அறிவுரையும் குருதேவரின் அறிவுரையும் ஒன்றே. வார்த்தைகளில்தான்

வித்தியாசம்.

குருதேவர்: அதிகம் பேசுவதை தவிர்க்க

யோகர்சுவாமிகள்: சும்மா இரு.

முயற்சிசெய்து பாருங்கள், அதன் பலன்கள் உங்களை வியக்கவைக்கலாம்.

முடிவாக, உள்ளுணர்வு மனத்தின் சக்தியை வெளியாக்கி நம் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வது எப்படி என்பதை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பினேன். இரவில் தூங்கப்போவதற்குமுன் உங்கள் பிரச்சினைகளை எழுதுங்கள். மிகச் சரியாகவும் விவரமாகவும் முழுமையாகவும் பிரச்சினைகளை எழுதுவதை உறுதிப்படுத்துங்கள். மறுநாள் காலையில் உங்களின் பிரச்சினைகளுக்கு உள்ளுணர்வு மனத்திலிருந்து ஒரு தீர்வு பிறக்கும் என்ற நம்பிக்கையில் படுக்கச் செல்லுங்கள்.


**கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்**
**சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு**
**வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**



கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன
அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர்
மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

# மானிடப் பிறவியின் மாண்பு

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

இந்த மண்ணிலே பிறந்த எல்லா மனிதருக்கும் மரணம் உண்டு. மருத்துவ வசதிகளின் உதவியினால் மரணத்தைப் பின்போடலாம். ஆனால் முற்றாகத் தடுத்து நிறுத்த முடியாது. பிறப்பவர் யாவரும் இறப்பது உறுதி என்பது ஆப்த வாக்கியம். "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்பது அப்பர் பெருமானின் வாக்கு. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" எனப் பிறவி நோயினால் ஏற்பட்ட களைப்பை மணிவாசகரும் கூறுகின்றார். "செத்த பிணத்திற்காக சாகப்போகும் பிணங்கள் அழுகின்றன" என்று மரண வீட்டில் அழுபவர்களைப் பார்த்து பட்டினத்தடிகள் கூறினார். ஒரு புல்லின் நுனியில் இருக்கும் புழுவானது அந்தப் புல்லிருந்து மறு புல்லிற்குத் தாவுவதுபோல ஆன்மாக்கள் பழைய உடல்களைக் களைந்து விட்டுப் புதிய உடல்களை எடுக்கின்றன என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது

மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் மரண வீட்டிற்குச் செல்லும் நாம் கவலை அடைகின்றோம். கண்ணீர் விடுகின்றோம். மரணம் என்னும் நிகழ்ச்சியில் தோன்றும் அனுபவமே துன்பம். நைந்துபோன பழைய ஆடையை எறிந்துவிட்டு நாம் புதிய ஆடை அணிவதுபோல, பழுதுற்ற உடலை எறிந்துவிட்டு உயிர் புதிய உடலைப் பெறுகின்றது என்றே பகவத்கீதையும் கூறுகின்றது. எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தாதவர்களுக்கு மீண்டும் பிறவி கிடைக்கிறது என்பதைப்

**"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலார்"**

எனத் திருமந்திரமும் செப்புகிறது.

உயிர் தங்கி நிற்கும் சிறைச்சாலையாகவே உடல் திகழ்கிறது. மாயா யந்திரமாகிய உடலுக்குள்ளே ஆன்மா மறைந்து நிற்கிறது என்பதை "மாயா இயந்திர தனுவினுள்

---

மனவடக்கத்திற்கு அடையாளம் நாவடக்கம்

ஆன்மா” எனச் சிவஞானபோதம் கூறுகிறது.

பிறவிகளில் மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்களிற் பலர் பிறவியின் பயனை உணராமல் வாழ்ந்து மடிகின்றார்கள். ஆனால் இறையருளுக்குப் பாத்திரமாகிய இந்த மண்ணிலே தோன்றும் சிலர் தமது வாழ்வைப் பயனுள்ளதாக்கி மகத்தான சாதனைகளைச் செய்துள்ளார்கள். இவர்கள் வாழ்ந்த காலம் குறுகியதாக இருந்தாலும் சாதித்த சாதனைகள் நிகரற்றவையாக உள்ளன. சங்கரர் முப்பத்திரெண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். சனாதன தர்மமாகிய இந்து சமயத்தின் சிறப்பைப் பாரத தேசம் முழுவதும் கால் நடையாகச் சென்று பரப்பினார். பௌத்த சமயத்தின் பிடியில் இருந்து இந்து சமயத்தைப் பாரதநாட்டில் அழியவிடாமற் பாதுகாத்த பெருமை சங்கராச்சாரியாருக்கே உண்டு. உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்பவற்றை ஆராய்ந்து அவற்றிற்கு விளக்க உரை எழுதினார். ஞான் யோகத்தில் நின்று இறையருளைப் பெற விரும்புகின்றவர்களுக்கு இவருடைய இந்த உரை நூல்கள் துணைசெய்தன. சாதாரண மக்கள் இறையருளைப் பெறுவதற்குத் துணை செய்யக்கூடியது பக்தி மார்க்கம் என்பதை உணர்ந்த சங்கரர் சிவானந்தலஹரி, சௌந்தர்ய லஹரி, பஜகோவிந்தம், கணேச பஞ்சரத்தினம், சுப்பிரமணிய புஜங்கம், கனகதாரா முதலிய பக்திரசம் ததும்பும் தோத்திர நூல்களைப் பாடியருளினார்.

வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் தொன்மை வாய்ந்த இந்து சமயத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சினார்.

“ஜீவ சேவையே சிவபூஜை” என்ற தனது கு’ருநாதனின் தாரக மந்திரத்தைச் செயல் வடிவம் ஆக்கினார். முப்பத்தொன்பது வருட குறுகிய கால வாழ்க்கைக் காலத்தில் உலகமே வியக்கும் சாதனைகள் பலவற்றைப் புரிந்தார். பரதேசிகளின் சமயம் இந்து சமயம் என்ற மேற்கு நாட்டவரின் பார்வையை மாற்றி மனிதனைப் புனிதனாக்கும் சமயம் இந்து சமயம் என்பதை நிறுவிக் காட்டினார். இவரால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண

---

பிரதி பலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத் தரும்
தன்னை அடக்கியவன் பிறரையும் அடக்கி ஆள்வான்

மிஷன் இன்று உலகின் பல பாகங்களிலும் கிளைகளை அமைத்து சமயப்பணி, சமுதாயப்பணி, கல்விப்பணி எனப் பல்வேறு பணிகளையும் புரியும் தொண்டு நிறுவனமாகத் திகழ்கின்றது.

வறுமையின் கோரப்பிடியிற் சிக்கித் தவித்த மகாகவி பாரதியார் முப்பத்தொன்பது வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆன்மிகக் கவிஞனாக, தேச விடுதலைக் கவிஞனாக, சமுதாய சீர்திருத்தக் கவிஞனாக பல்வேறு நிலைகளில் கவிதைகளைப் பாடித் தமிழ்ச் சமுதாயத்திற்கு உந்து சத்தியாகத் திகழ்ந்தார். சிறந்த சக்தி உபாசகராகிய பாரதியின் தெய்வீகப் பாடல்களில் ஆன்மீக சிந்தனைத் தெளிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. 'சொல்லடி சிவசக்தி' என்று அம்பிகையை உரிமையோடு அழைத்து தனது சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அறிவைச் சரியாகப் பயன்படுத்தக்கூடிய வல்லமையையும் தரவேண்டும் என்று வேண்டி நிற்கின்றார். பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண் புழுக்கம், அச்சம் ஆகிய எட்டும் மனிதனின் மனதைப் பாழ்படுத்தும் அகப் பேய்கள் என்கிறார். அப்பேய்களை அடியோடு களைவதற்கு ஞானம் என்கிற வாளைத் தூக்க வேண்டும் என்கிறார்.

சங்கரர், விவேகானந்தர், பாரதியார் ஆகிய மூவரும் இப்பூமியிலே வாழ்ந்தகாலம் மிகவும் குறுகியது. ஆனால் நூற்றாண்டு காலம் வாழ்ந்து மறைந்தவர்கள் சாதிக்காத சாதனைகள் பலவற்றை மூவரும் செய்துள்ளார்கள். வாழும் காலம் முக்கியமல்ல. வாழும் முறைதான் முக்கியம் என்பதை மூவரும் உணர்த்தியுள்ளளனர்.

இலட்சக்கணக்கான உயிர்கள் நாள்தோறும் மடிகின்றன. பிறப்பும் இறப்பும் சக்கரம். சுழல்வதுபோல நாள் தோறும் இடம் பெறுகின்றன. மகத்தான பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்தவர்களில் பலர் பகுத்தறிவில்லாத மிருகங்களிலும் மோசமான வாழ்க்கையை இம்மண்ணிலே வாழ்கிறார்கள்.

---

ஆசை உள்ளளவும் அல்லல்களும் உண்டு
அன்பு ஓங்கும்போது அச்சம் அகலுகிறது

தன்னுடைய வீட்டில், தான்வாழும் சூழலில் வாழ்பவர்களைத் துன்பப்படுத்துவதிலே இன்பம் காண்கின்றார்கள். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றார் தவயோகி திருமூலர். ஆனால் தன்னையும் துன்ப வலையிற் சிக்க வைத்துவிட்டுத் தான் வாழும் சூழலையும் துன்ப மயப்படுத்தி தரித்திரத்தையும், துக்கத்தையும் அரவணைத்து வாழப் பலர் முற்படுகின்றனர். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்றார் நாவுக்கரசர். ஆனால் துன்பமே எந்நாளும் இன்பமில்லை என வாழ்க்கையையே நாசமாக்கி வாழச் சிலர் முனைகிறார்கள். நாலு தலைமுறைக்குத் தேவையான பணத்தை தேடி வைத்திருக்கிற பலர் வயிறார உண்ணவும் முடியாது, நிம்மதியாக உறங்கவும் முடியாது தவிக்கிறார்கள்.

இறையருள் நமக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு செயற்படுபவர்களின் காரியங்கள் யாவும் சித்தியாகும். ஈனர்களின் செயல்கள் எதுவும் இவர்களைத் தாக்காது. தர்மத்தை முன் வைத்து அற வாழ்வு வாழ்பவனைத் தர்மம் என்றும் காப்பாற்றும். எடுத்த பிறப்பினைச் சீராகப் பயன்படுத்தி ஒழுங்காக வாழ்ந்த மனிதன் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுவான் என்பதை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற செந்நாப் போதருடைய திருக்குறள் செப்புகிறது.

---

## 2013 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி நினைவாக (2013) — $100.00

சு. சிவதாஸ், முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லி கல்லூரி (2013) — $100.00

---

மனவடக்கத்திற்கு அடையாளம் நாவடக்கம்
உண்மைபேசுதல் யாகங்களிலும் மேலானது

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

## பாகம் - 2

(சு. சிவதாஸ், முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி)

1877ம் ஆண்டு திருவாதிரைத் தினத்தன்று திருச்சுழி பூமிநாதர் சிவாலயத்தில், சுவாமி வெளியுலாச் சென்று, உள்ளே செல்லும்போது இரவு 1மணியாகிவிட்டது. அந்த நேரத்திலே புனர்பூச நட்சத்திரத்துக்குரிய நாளாகிவிட்டது. அந்த நேரத்திலேதான் வேங்கடராமன் (ரமண மகரிஷியின் இயற்பெயர்) தனது தாயின் இல்லத்தில் பிரசவமாயினார். அந்தநேரம் மருத்துவப் பெண் தாதியாக உதவிக்கு நின்றவருக்கு பார்வை இல்லை. ஆனால் கண் பார்வையற்ற அவருக்கு பிள்ளை பிரவசமாகும்போது பேரொளி ஒன்று தெரிந்ததாம். பகவான் ரமணர் பேரொளியோடு பிறந்து பேரொளியோடு சென்றார். 1950ஆம் ஆண்டு சித்திரைப் புதுவருடத்தன்று இரவு 8.47 க்கு ரமண பகவான் தனது உடலை நீக்கிக் கொண்டார். அந்த நேரத்தில் அவர் இருந்த அறையிலே பல்லோரும்காண பேரொளி ஒன்று தோன்றியது. அது ஆகாயத்தில் எழுந்து ஒரு வால்வெள்ளி போல் பிரகாசத்துடன் சென்று திருவண்ணா மலையின் உச்சியை சென்றடைந்தது.

இந்த மகானுடைய வரலாற்றையே சென்றமுறை பாகம் 1 இல் பார்க்க ஆரம்பித்தோம். 16 வயது முதிர்ந்த வேங்கடராமன் திருவண்ணாமலையை அடைந்ததும், என்செயலாவது யாதொன்றும் இல்லை, எல்லாம் நின்செயலே என்று சொல்லிவிட்டு பாதாள லிங்க குகையிலே இலிங்கத்துக்கு பின்னால், ஒழிந்து நிஷ்டையிலே இருந்துவிட்டார் என்பதை கடந்த கட்டுரையிலே பார்த்தோம். பூச்சி புழுக்கள் அவரது தொடையை அரித்துத்தின்றன. கௌபீனத்தோடு தன்னை மறந்து சமாதியிலே இருந்த அவருக்குத் தனது உடலில் இருந்து இரத்தம் கசிவது ஏதுமே தெரியாது இருந்தார். எவ்வளவு காலம் அங்கே இருந்தார் என்பது எவருக்கும் சரியாகத்

---

மனவடக்கத்திற்கு அடையாளம் நாவடக்கம்
உண்மைபேசுதல் யாகங்களிலும் மேலானது

தெரியாதபோதும் சுமாார் 6 கிழமைகள் எனச் சிலர் கணக்கிடுகின்றனர். ஒரு தினம் சேஷாத்திரி சுவாமிகள் அந்தப் பாதாள இலிங்க குகையினுள் காத்திராப்பிரகாரம் நுழையும்போதே வேங்கடராமனைக் கண்டார். நிலமையைப் பார்த்து அவரை வெளியே இழுத்து வந்தார். திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்துள்ளே ஆயிரங்கால் மண்டபத்துக் கருகிலேதான் இந்தப் பாதாள லிங்கக் குகை இருக்கின்றது. குகையிலே இருந்து மீட்டு, அவரை அதற்கு அயலாக ஆலயத்துள்ளே இருக்கும் சுப்பிரமணியர் சந்நிதியிலே வைத்திருந்தார்கள் சேஷாத்திரி சுவாமிகள். அவ்விடத்திலும் பிறருடைய தொல்லை இருந்ததனால், ஆலயத்தின் வாகனசாலையில் வைத்து பராமரிக்கப்பட்டார். இங்கேயும் வேடிக்கை பார்க்கும் மக்களாலும் கேலி செய்யும் மக்களாலும் பாதிக்கப்பட்டார். இவ்வாறு ஆறுமாத காலம் ஆலயத்திலே பிராமணசுவாமி 'என்று அந்த நாட்களில் அழைக்கப்பட்ட வேங்கடராமன் தங்கவைக்கப்பட்டார். இக்காலத்தில் இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சேஷாத்திரி சுவாமிகள், வெங்கடாச்சல முதலி, உத்தண்டி நாயனார் மற்றும் அண்ணா மலைத் தம்பிரான் ஆகியோர். பிராமண சுவாமியின் நிஷ்டை குழம்பாமல் இருப்பதற்காக அண்ணாமலைத் தம்பிரானுக்குச் சொந்தமான குருமூர்த்தம் என்று சொல்லப் பட்ட ஒரு சமாதிக் கோயிலுக்கு அவரை எடுத்துச் சென்றார்கள். அது அருணாச லேஸ்வரர் ஆலயத்துக்கு சற்றுத் தொலைவில் உள்ளது. 18 மாதம் குரு மூர்த்தத்தில் ரமண மகரிஷி இருந்தகாலத்தில் அவருக்கு முழுப்பாதுகாப்பும் ஆதரவும் கொடுத்தது பழனிச்சாமி ஆகும். குருமூர்த்தத்திலும் எறும்புகள் போன்ற தொல்லைகளும், மற்றும் பழனிச் சாமி வெளியே செல்லும் சமயங்களில் பிறர் வந்து மகரிஷியின் நிஷ்டையைக் குழப்பும் தொல்லைகளும் இருந்தன.

இதனையடுத்து ரமணமகரிஷியும் பழனிச் சுவாமியும் ஒரு மாம்பழத் தோட்ட வளாகத்துக்கு இடம்பெயர்ந்தார்கள். மாம்பழத் தோட்டக்காரன் வெளியாரை உள்ளே விடமாட்டான். அதனால் இவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். இவர்கள் இருந்தது ஒரு கிடுகால் வேயப்பட்ட குடிசையாகும். இந்தநாட்களிலே

---

அனைத்தையும் தன்னகத்தில் அணைத்துக் கொள்ளது அன்பு

பழனிச்சாமி திருவண்ணாமலைப் பட்டினத்துக்குச் சென்று ரமணருக்கு புத்தகங்கள் வாங்கி வந்து வாசிக்கக் கொடுப்பார். பாடசாலைக்குப் பிறகு இங்குதான் ரமணர் வாசிக்கத் தொடங்கினார். கைவல்ய நவநீதம், வேதாந்த சூடாமணி, அத்தியாத்ம ராமாயணம், யோக வாசிஷ்டம், பிரபுலிங்க லீலை ஆகிய புத்தகங்களை ரமண பகவான் வாசித்தார். சுமார் 6 மாத காலத்துக்குப் பின்பு, இருவரும் வெளியேற வேண்டி வந்தது. அதனால் இருவரும் அருணகிரிநாதர் ஆலயத்தில் தங்கினர். அங்கும் வெளியார் தொந்தரவு தொடங்கவே பழனிச்சாமி ரமணரை பவளக்குன்று என்று அழைக்கப்படும் சிறிய மலைக்குன்றில் வைத்துப் பராமரித்தார். இந்த வாலிப ரமணரின் புகழ் பரவத் தொடங்க, பவளக்குன்றிலே ஆட்கள் கூடிக்கொண்டு போனதால், பழனிச்சாமி புதிய இடம் தேடி ரமணரை அண்ணாமலைச் சாரலில் உள்ள விருபாட்ச குகைக்கு அழைத்துச் சென்று பராமரித்தார். விருபாட்ச குகையிலே பழனிச் சுவாமிக்கு உதவியாக பெருமாள் சுவாமி, ஐயா சுவாமி, கந்தசுவாமி ஆகியோரும் சேர்ந்து கொண்டனர். பழனிச்சாமி ஒரு மலையாளத்தவர். அவரிடம் இருந்து ரமணர் மலை யாளத்தைக் கற்றுக்கொண்டார். மேலே குறிப்பிட்ட அருணகிரிநாதர் ஆலயத்தில் ரமணர் தங்குகிற காலத்திலே தினமும் பிச்சை எடுத்தே சாப்பிட்டு வந்தார். எனினும் விருபாக்ஷ குகையில் ஏனைய அடியவர்களே பிச்சை எடுத்து ரமணருக்கும் உண்ணக் கொடுப்பார்கள். ரமணருடைய இந்த உதவி யாளர்கள் ரமணருடைய பக்தர்களாவார்கள். இவர்கள் பிச்சை எடுக்கச் செல்லும் போது ஆதிசங்கரர் பாடிய 'சாம்ப சதாசிவ, சாம்ப சதாசிவ, சாம்ப சதாசிவ, சாம்ப சிவோம்'. என்ற பாடலைப் பாடுவார்கள் இந்தப் பாடலைக் கேட்டவுடனேயே மக்களுக்குத் தெரிந்துபோகும் ரமணருடைய அடியவர்கள் வருகிறார்கள் என்று. அவர்களும் சாப்பாட்டை ஆயத்தமாக வைத்து வழங்கி விடுவார்கள். இதைக் கண்டு வேறு சில குழப்பக்காரர்கள் இதே பாடலைப் பாடிக்கொண்டு முதலிலே சென்று உணவைப் பெற்றுவிடுவார்கள். இதற்காக ரமணரிடம் தமக்கு ஒரு பாடல் எழுதித் தரும்படி கேட்டார்கள். ரமண பகவான் மௌனமாகவே இருந்தார். ரமணரோடு இவர்கள் எல்லோரும் தினமும் கிரிவலம்

---

துக்கம் தீய செயலில் இருந்து தோன்றுகிறது.

வருவார்கள். 14 கிலோமீற்றர் தூரமுள்ள கிரிவலம் என்பது அண்ணாமலையை வலம் வருதலாகும். ஒருதினம் கிரிவலத்திற்குப் புறப்படும்போது, ரமணர் வாயிலே பாடல்களை முணுமுணுத்தார். அடியார்களிலே கூடிய கல்வியறிவு பெற்றவராக அந்த நேரம் இருந்தவர் ஐயா சுவாமியாகும். பழனிச்சாமி ஐயாசுவாமியிடம் பேப்பரும் பென்சிலும் கொடுத்து இதை எடுத்துக்கொண்டு போகும் படியும் பகவான் பாடினால் அதை எழுதும்படியும் சொன்னார். அன்றைய தினம் அந்த கிரிவலத்தின்போது பகவான் 108 இரட்டைவரிப் பாடலைப் பாடினார். இதுவே உலகப்புகழ்பெற்ற 'ஸ்ரீ அருணாச்சல அட்சர மணிமாலை' என்ற நூலாகும்.

(தொடரும்)

---

### 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் யசோதநாயகி | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திரு. செல்வா இராஜதுரை | $ 200.00 |
| திருமதி. அன்னபூரணம் ஞானசம்பந்தர் | $ 200.00 |
| திருமதி வேந்தினி ஈஸ்வரமூர்த்தி | $200.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| திரு. ஆறுமுகம் சரவணமுத்து | $200.00 |
| V. N. சோமசுந்தரம் | $400.00 |

---

# திருமந்திரத்தில் அரசாட்சி முறை

முனைவர் இரா. தமிழ்ச்செல்வம்
எம். ஏ., எம். பில்., எம். எட்., பி. எச். டி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம்

சென்ற இதழ் தொடர்ச்சி

**வீரம் பேணல்:**

மன்னனின் அடுத்த தகுதிப்பாடு வீரமாகும். வீரம் என்பது விவேகமான வீரம்; தர்மத்தைப் பேணும் வீரம் என்பதாகும். திருமந்திரம் அறத்தையும், அறவோரையும் காக்கும் வீரத்தையே வீரமாகக்கருதுகிறது. காத்தல் தொழிலில் மன்னன் மேற்கொள்ள வேண்டிய அடிப்படைத்தர்மம் "வந்த சண்டையை விடாதே; வம்புச் சண்டைக்குப் போகாதே" என்பதாகும். அரசன் தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை பிறர் கொள்ள வந்தபோது காக்கவேண்டும். அப்படிக் காவாத அரசனும், தன் மாட்சிமை பொருந்திய படைகளின் ஆற்றல்ச் செருக்கால் பகைவனுக்கு அழிவை உண்டாக்குபவனும் பாய்ந்து கொல்லும் புலியைக் காட்டிலும் கொடியவன்' என்று குறிப்பிடுகின்றது. இதனை

"வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்
பேர்ந்துஇவ் உலகைப் பிறர்கொள்ளத் தாம்கொள்ளப்
பாய்ந்த புலிஅன்ன பாவகத்தானே"

(திருமந்திரப்பாடல்: 245)

இப்பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**சமயம் பேணல்:-**

சமயம் என்பது மக்கள் மேற்கொண்டுள்ள உயிர்க் கொள்கையாகும். உலகியற் கொள்கை அனைவருக்கும் பொதுவான கொள்கையாகும். அதில் வேறுபாடு இல்லை. ஆனால் சமயக் கொள்கையை அவரவர் மேற்கொண்ட வரம்பின்படி ஒழுகுதல் வேண்டும். ஒருவரோடு ஒருவர் பிணங்கி வாழ்வது அறமாகாது. இணங்கி வாழ்வதே அறமாகும். அத்தகைய இணக்கத்தை உண்டுபண்ணுவது அரசனின் கடமையாகும்.

---

தெய்வீக உணர்ச்சியால் மேலான வாழ்வு கிடைக்கிறது
கடவுள் சிந்தனை இருந்தால் பாவம் நுழையாது

தத்தம் சமயத்தைப் பின்பற்றாது கலகம் விளைவிப்பவனை இறைவன் மறுமையில் தண்டிப்பான். ஆனால் இம்மையில் தண்டித்து திருத்துபவன் அரசனே ஆவான். இதனை,

"தத்தம் சமயத் தகுதிநில் லாதவரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும் செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது அவ் வேந்தன் கடனே"

( - திருமந்திரம் பாடல்: 247)

இப்பாடல் தெளிவாக்குகிறது.

**திருக்கோயில் பூசைகளை கவனத்தில் கொள்ளல்:-**

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களில் பொது வழிபாட்டுப் பூசைகள் செம்மையுடன் நடைபெற்றிட கொடை வள்ளல்கள் நிலங்களையும், பொருள்களையும் அளித்துள்ளனர். எனவே, பூசைகள் தங்கு தடையின்றி நடைபெறுவதையும் மன்னன் நேரில் சென்று கண்காணிக்க வேண்டும் என்று திருமூலர் குறிப்பிடுகிறார். மேலும், பொதுச் சொத்துக்களாகிய திருக் கோயில்களைச் சார்ந்த உடமைகள் எல்லோராலும் பாது காப்பதற்குரியது. அவற்றைப் பற்றி தனிமனிதர்களும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர்களும் கண்டு கொள்ளாமல் தம் கடமை மறப்பார்களானால், மன்னன் வலிமை குன்றுவான். அவனுக்கு தீங்குகள் பல ஏற்படும். நாட்டில் மழை வளம் குறையும். இயற்கை வளங்குன்றும். திருடர்கள் மிகுவர். நாட்டு மக்களுக்கு குணப்படுத்த முடியாத, மருந்தே இல்லாத நோய்கள் உண்டாகும். என்பதைத் திருமூலர் நமக்கு நினைவுபடுத்துகிறார். இதனை,

"ஆற்றரும் நோய்மிக்கு அவனி மழையின்றி
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுஉதைத் தான்திருக் கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

(திருமந்திரம் - பாடல் எண் 517)

என்றும்

---

தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்

“முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே”

(திருமந்திரம் - பாடல்: 518)

என்றும் கூறுவர். எனவே திருக்கோயிற் பூசைகள் தொய்வில்லாமல் நடைபெற மன்னனின் பங்கு மிகமிக அவசியமாகும். கோச்செங்கணான் என்னும் சோழ மன்னன் இறைவன் மீது வைத்த பற்றின் காரணமாக எழுபதுக்கும் மேற்பட்ட மாடக்கோயில்களைக் கட்டினான் என்ற செய்தியை இங்கு நினைவில் கொள்ளுதல் வேண்டும். கோயில்கள் கொள்ளையர்களின் கூடாரமாய் மாறுவதற்கு அரசன் துணை நிற்கக் கூடாது என்ற கருத்து இங்கு வெளிப்படுகிறது.

---

**கள்ளுண்ணலைத் தடுத்தல்:-**

ஐம்பெரும் பாவச் செயல்களிலே கொலைக்கு அடுத்ததாகக் கொடுமைமிக்கது கள்ளுண்ணல். உடம்பையும், உணர்வையும் ஒருங்கே சுருக்கும் தன்மை வாய்ந்தது கள். இத்தகைய கள்ளினை பருகுபவர்கள் முற்காலத்தில் சமுதாயத்தில் இருந்துள்ளனர் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

“சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம் பாடத் தான்மகிழ்ந்து உண்ணு மன்னே ...”

( - புறநானூறு: 235)

“கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே”

( - திருமந்திரம் பாடல்: 328)

“மயக்கு மதுவுண்ணு மாமூடர்” (- திருமந்திரப் பாடல்: 329)

தனிமனித வாழ்க்கையைச் சீர்படுத்த நினைத்த திருமூலர் கள்ளுண்ணாமையை வலியுறுத்துகின்றார். கள்ளுண்டு

---

பிரதி பலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத் தரும்

பிதற்றலைத் தவிர்க்க வேண்டும். கள்ளுண்ணல் நாட்டு நலனைச் சிதைக்கும். கள்ளுண்போர் தமக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் கேடு விளைவிப்பர். ஆதலின் மன்னன் அவர்களை இனங்கண்டு தண்டிக்க வேண்டும் என்கிறார்.

**"மால் கொண்டு தேறலை உண்ணும் மருளவை**
**மேல் கொண்டு தண்டம் செய் வேந்தன் கடனே"**

என்பது அப்பாடல் வரியாகும்.

இவ்வாறு திருமூலர் மன்னனுக்கு 'அரசாட்சி முறை'யைத் தெளிவுறுத்துகின்றார். சிவநெறிச் சிந்தையை வளர்க்க அரசன் பாடுபடுதல் வேண்டும். ஆன்மீக வளர்ச்சியே அரசுக்குத் தூணாகும் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

---

### ஆத்மஜோதி வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஆத்மஜோதி அன்பர்களே

ஆத்மஜோதி காலாண்டு இதழானது 3000 பிரதிகள்படி ஆண்டுக்கு 12000 மலர்கள் இலவசமாக தபாலிலும், நேரடியாகவும், வியாபார நிலையங்களிலும் ஆலயங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு தங்கள் கரங்களில் தவழுகின்றது.

65 வருடங்களுக்கு மேலாக தடையின்றி வெளிவரும் ஆன்மீக இதழ் கனடாவிலிருந்து தொடர்ந்து வெளிவருவது ஈழமக்களின் ஆன்மீகப் பற்றுக்கு நல்லதொரு சான்று. இப் பெருமை வாய்ந்த 'ஆத்மஜோதி' க்கு தபால் செலவு உட்பட இதர செலவுகளும் உண்டு.

அருட்செல்வம் நிறைந்த 'ஆத்மஜோதி' பொருட் செல்வம் குறைந்த நிலைகண்டு மனம் கலங்குகிறோம்.

ஆன்மீக நூல்கள் வெளிவர உதவி புரிதல் ஞானதானம் ஆகும். ஞானதானத்தின் பிரதி பலனாக பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வம் பெறலாம். உடல் உழைப்பால் வரும் பணச் செல்வம் இப் பிறப்பிற்கு பயன் தரும். கல்விச் செல்வம் எப்பிறப்பிற்கும் பயன் தரும். ஞானதானம் பற்றி ஞானிகள் மக்களை ஊக்கப் படுத்துவது இதன் பொருட்டேயாகும்.

ஞானதானம் செய்து தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பயன்பெற அன்போடு 'ஆத்மஜோதி' வேண்டுகிறது. தங்களது நிதியுதவியை விருப்புடன் வரவேற்கிறோம

---

# சைவசித்தாந்தமும் அறிவியலும்

சைவசித்தாந்தக் கலாநிதி, சிவஞானக் கலாநிதி, தமிழ் மறை சீலர்
சிவத்திரு அ. சொ. சுப்பையா M. A.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**ஐம்முகக் கடவுள்**

சதாசிவத்துக்கு ஈசானம் தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து அருள்திரு முகங்கள் உள என்றும் அவற்றால் அவன் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை நம்பொருட்டு இயற்றுகிறான் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. அத்தகு அமைப்பு நம் சிரசினுள்ளும் இருப்பதைக் அறிவியல் துணை கொண்டு காணலாம்.

ஈசானம் என்பது உச்சி முகம். அஃது அறிவானந்தப் பேரருள்புரியும் திருமுகம். அத் திருமுகத்தால் ஞானவான் களுக்கான ஆகமங்களைத் தோற்றுவித்தான் எனவும் திசை முகங்கள் நான்காலும் நான்கு வேதங்களையும் படைத்தான் எனவும் சாத்திரங்கள் இயம்புகின்றன.

இந்நாளில் பொய்யான பொருளீட்டத்திலேயே இயந்திர வாழ்வு வாழுகின்ற நாம் பெருமூளையின்(2%) இரண்டு விழுக்காடு மட்டுமே பயன்படுத்துகிறோம் என்பது இக்கால மேலைநாட்டு மருத்துவர்களின் கணிப்பு. இஃது மிகவும் வருந்துதற்குரிய செய்தி யன்றோ?

**சிவபூமி:**

சிவாகமத்தின் தெளிவாகத் திருமந்திரம் என்னும் வாழ்வியல் கருவூலத்தை இயற்றியருளியவர் திருமூலர். அவர் தம் உடம்பினுக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டிருப்பதைக் கண்டவர். உடம்பிலுள்ள நாடிநரம்புகளை இணைத்து மையநரம்பு மண்டலத்தையே 'சிவபூமி' என அவர் அறிவுறுத்துகிறார்.

**மேரு நடுநாடி, மிக்(கு) இடை பிங்கலை**
**கூடரு(ம்) இவ்வானின் இலங்கைக் குறியுறும்**

---

ஒருவனின் ஆசைக்குத் தக்க பந்தமும் இருக்கும்

சாரும் தில்லை வனத் தண்மாமலயத்து
ஊடுஏறும் சுழுனை, இவை சிவபூமியே

- திருமந்திரம் 2747

## தத்துவ அமைப்பு

அடுத்து, சிவபூமியில் பயணிப்பதற்கான அனுட்டான முறைகளைக் கூற வந்த ஆகம மரபினர், நரம்பு மண்டலத்தைக் கொண்டே மாயாகாரியத் தத்துவங்களின் அடைவினை வகைப்படுத்தினர்.

சிவ தத்துவங்கள் - 5 - சிரசிலுள்ள பெருமூளை நரம்புகள்
வித்தியா தத்துவங்கள் - 7 - கழுத்து நரம்புகள்
ஆன்ம தத்துவங்கள் - 24 - முதுகுத்தண்டு நரம்புகள்.

## அகமும் புறமும்

இவ்வாறு மையநரம்பு மண்டலமான மூளை முதுகந்தண்டில் ஆன்மா வாழ்வதை ஆதாரயோகம் எனச் சைவசாத்திரங்கள் போற்றுகின்றன. அதனை இறைமையை நோக்கிய அகத்திணை வாழ்வு எனப் போற்றினர். வாயிலும் வயிற்றிலுமான பாலுணர்வு வாழ்விலும் அடிவயிற்றுப் பாலுறவு வாழ்விலும் சிற்றின்ப வேட்கை கொண்டு போரிட்டுக் கழிப்பதைப் புறத்திணை வாழ்வு என்று வகைப்படுத்தினர். தொல்காப்பியம் போன்ற பண்டைய நூல்கள் இதற்குச் சான்று.

ஆன்மா பெண் இயல்பினது

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே

- என்பது தொல்காப்பியம்

பெண் இயல்பினதான ஆன்மா கொழுகொம்பு தழுவிய கொடிபோல இறைவனைச் சுழுமுனை என்னும் முதுகு நரம்பினில் தழுவி மேலே ஏறினால், எலும்பு நரம்புகளால் கட்டுண்ட உடல் நீங்கி, அவன் விரும்பும் தலைவியாக அணிசெய்யும் வாய்ப்பினையும், மும்மலக்கட்டு நீங்கித்

---

*தன்னை அடக்கியவன் பிறரையும் அடக்கி ஆள்வான்*
*தாயின் அன்பின் மூலமாகக் கடவுளின் அன்பை அறியலாம்*

தெய்வீகநிலை பெற்றமையால், கடவுளரோடு சேர்த்து வணங்கத் தக்க உயரிய வாய்ப்பினையும் பெறும் என்பது கருத்து.

## ஆணைத்தானமும் ஞானப்பாலும்

ஆறு ஆதாரங்களில் தலையாயது 'ஆக்ஞை' என்னும் ஆதாரம். தமிழில் இதனை ஆணைத்தானம் என்கிறோம். "ஆணையின் நீக்கமின்றி நிற்கும் (பதி) என்பது சிவஞானபோதம் (2-ஆம் சூத்திரம்). ஆணை என்பது சிவசத்திக்குப் பரியாய பெயர் என்பார் சிவஞானமுனிவர். இஃது நம் சிரசினுள் 'பிட்யூட்டரி' என்னும் தலைமைச் சுரப்பியாக எவ்வாறு இயங்குகிறது என்பதையும், இங்கு மெமிலரிபாடி (Mammillary Body) என்ற மருத்துவப் பெயரோடு, காமதேனுவுக்கு உள்ளது போன்ற முலைக்காம்புகள் உள்ளன என்பதையும் அதில் ஞானப்பால் சுரக்கும் என்பதையும் எமது திருஞானசம்பந்தர் தேவாரம் - முதலாம் திருமுறை - முதல்த் தொகுதி உரைநூலில் (அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளி யீடு 2006) வரைபடங்களோடு விளக்கியுள்ளமை காணலாம்.

சிவபெருமான் தன் அருட்சத்தியோடு திருக்கயிலையில் அமர்ந்து அருள் பாலிக்கிறான் என்பது சித்தாந்தம். அதற்கு ஏற்ப நம் பெருமூளையின் இரு கூறுகளிலும் சிவன் சத்தி இருவரும் அமர்ந்து நம்மைச் செவ்விதே வழி நடத்துகின்றனர் என்னும் இறையனுபவம் இக்கால அறிவியலோடு ஒட்டிய சீரிய ஆன்மீகம்.

## இறைநோக்கு மூளை

பண்டையநாளில் இறைப்பற்று மிக்க நம் முன்னோர்கள் என்ன செய்தார்கள்? தியானம் வழிபாடு முதலிய உயரிய பயிற்சிகளால் டெலென்கெஃபெலான் (Telencephelon) என்ற பெருமூளைப் பகுதியின் வளத்தைப் பெருமளவில் பயன்படுத்தி மீதானத்தில் இறைவனிடம் திருவருள்த் தொடர்பு கொண்டிருக் கிறார்கள். இத்தகைய உயரிய பண்பாடு தமிழகத்தில் இருந்தமை நூல்களின் வழியாகத் தெளியலாம்.

---

வறுமை என்னும் நோய் வாழ்வைப் பண்படுத்துகிறது
சுயநலம் கொண்டவர்களே பிற்போக்குவாதிகள்

**மூலாதார விநாயகர்**

பலபல காமத்தராகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு

என விநாயகப் பெருமானைப் போற்றிசைப்பார் அப்பரடிகள். ஊழ்வினை நுகர்ச்சிக்காக ஆன்மாவை உலக முகப்படுத்துவதும், மெய்ஞ்ஞான வேட்கையுடையாரைச் சுழுமுனாநாடி வழியாக மேலே ஏற்றுவதும் செய்பவர் விநாயகர். அவர் நம் இருப்பிடத்து மூலாதாரத்தில் அமர்ந்திருக்கும் பெற்றிமை வணங்கி மகிழத் தக்கதாகும்.

**முருகப்பெருமான்**

அசுரரின் சிறையிலிருந்து தேவர்களை மீட்டுப் புனர் வாழ்வு அளிக்கவும், சிவபூசைச் செல்வனான சூரனை மயிலூர்தி மற்றும் சேவற்கொடியாகக் கடைத்தேற்றவும் தோன்றிய சிவ - வடிவமே முருகப்பெருமான். அவனுடைய ஆறு முகங்களும், பன்னிரு தோள்களும் நம் உடம்பில் ஆறு ஆதாரங்களாகவும், நெஞ்சுத் தானம், மற்றும் தலையினுள் பன்னிரண்டு நரம்புகளாகவும் அமைந்துள்ளமை சிந்திக்கற்பாலது. குறமகளான வள்ளி அழுக்கு மிகுந்த நீலவண்ணக் குருதியாகவும், தெய்வமகளான தெய்வயானை தூய செங்குருதியாகவும் தோகை விரித்தாடும் மயில் விரிந்து பரந்த முதுகு நரம்புபுகளாகவும், கூர்மையான வேல் சுழுமுனைநாடியாகவும் தியானப் பொருளாகி, உடல் வளத்துக்கும் மனநலத்துக்கும், உயிரின் முத்திப்பேற்றுக்கும் பெரிதும் துணைநிற்கின்றன.

**சான்றோர் பண்பு**

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் இவ்வாறாக ஒவ்வொருவர் உடலிலும், மனத்திலும், உயிரிலும் உறைகின்றான் என்பதே உண்மை. பேரின்பம் என்பது இப்பிறப்பில் இப் பூத உடம்பில் வாழும்போதே பெறக்கூடிய ஒன்றுதான் என்பதைச் சான்றாண்மை மிக்க நம் முன்னோர்கள் தம் அனுபவத்தால் உணர்ந்திருந்தார்கள்

---

சுயநலத்திநின்றும் விலகியவன் நரகத்தை அறியான்
கடவுள் தன் இருப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார்

'அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன் வயின் வருதலும் வகுத்த பண்பே' - தொல்காப்பியம்

அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதுஒன்று என்பதால்? - மணிவாசகர்

இவ்வாறு ஆனந்தம் பெற அவர்கள் உடலை அறுத்துக் கூறுசெய்யவில்லை. உட்காட்சியாகவே தம்முள் இறைவனை அனுபவித்து உணர்ந்தார்கள். திருவடிப் பேரின்பத்தையே தமக்குத் தலையாய குறிக்கோளாகக் கொண்டார்கள்.

அவர்களைப் பின்பற்றிச் சைவ அனுட்டானம், அந்தர்யாகச் சிவபூசை முதலிய செந்நெறிப் படி ஒழுகிச், சிவபெருமானை அவரவர் உடம்பின் உள்ளேயே அன்பால் உணர்ந்து, ஒன்றியிருந்து, உணர்வு பூர்வமாக வழிபட்டு நன்றிசெய்து, நற்பயனுறுவதே சீலமிகு பண்பாகும். அப்போது, உடலின் நுண்ணிய மற்றும் அதிநுண்ணிய உள்-உறுப்புக்கள் திண்மை பெறுவதையும், மனம் தூய்மையுறு வதையும், உளப்பாங்கின் ஊற்றம் பெருகுவதையும் உணர்ந்து, அந்தமிலா ஆனந்தத்தை நாமும் பெறமுடியும் என்பது உறுதி.


# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில்
இருந்து நேரடியாக
புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து
விற்பனை செய்கிறோம்

அதிவேக துரித
பணமாற்றுச் சேவை

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit #125**

**TEL: 416-321-0285**

# துடக்கு என்னும் ஆசௌச விளக்கம்

குருவடி பணிந்து

மருத்துவ கலாநிதி இ. லம்போதரன் MD

**மார்கழி 2013 இதழ் தொடர்ச்சி**

துடக்கு அல்லது ஆசௌசமானது காலக்கிரமத்தாலும், தலை முழுகுவதாலும், அல்லது இவ்விரண்டாலும் ஆகிய மூன்று வழிகளால் நீங்கும். கிராமத்தவருக்கு காலத்தாலும், உறவினருக்கு தலை முழுகலாலும், பூரண துடக்குள்ள நெருங்கிய உறவுகளுக்கு துடக்குக் காலம் முடிய தலை முழுகுதலினாலும் துடக்கு நீங்கும். உறவினர்களுக்கு அவர்களின் உறவு நெருக்கத்தைப் பொறுத்து ஆசௌச காலம் எவ்வாறு வேறுபடுகின்றது என்று பார்ப்போம்.

**ஞாதியர்:** முதலாவது தலைமுறை என்பது குழந்தையின் சகோதரர்களாம். இரண்டாவது தலைமுறை என்பது தந்தை, தாய், தந்தையின் ஆண் சகோதரர்கள், அவர்களின் மனைவிமார், தந்தையின் திருமணமாகாத சகோதரிகள் ஆகியோர்களாம் மூன்றாவது தலைமுறை என்பது தந்தையின் சகோதரர்களின் ஆண் பிள்ளைகள், மற்றும் திருமணமாகாத பெண்பிள்ளைகளும், தந்தை வழிப் பாட்டனும், பாட்டியும், பாட்டனின் ஆண் சகோதரர்களும், அவர்களின் மனைவிமாரும், பாட்டனின் திருமணமாகாத சகோதரிகளுமாம். இவர்களை ஞாதியர் என்று கூறுவர். அதாவது நெருங்கிய உறவினர்.

**சபிண்டர்கள்:** மூன்றுக்கு மேல் ஏழாவது தலைமுறை வரையுள்ள இந்த உறவுகளை சபிண்டர்கள் என்று கூறுவர். அதாவது பிண்டம் வைத்துப் பிதிர்க்கடன் செய்யும் உரிமையுள்ள இரத்த உறவினர்.

**சமானோதகர்:** ஏழில் இருந்து பன்னிரண்டு தலைமுறை வரையுள்ள ஆண்வழி உறவுகளை சமானோதகர் என்று கூறுவர்.

---

தூய்மையில் நிலைத்திருப்பதே வாழ்வின் குறிக்கோள்
அன்பும் அனுதாபமும் சாதனைகளில் சிறந்தவை

---

அதாவது நீரினால் தர்ப்பணம் செய்யும் உரிமை உடையவர். கணவனுடைய ஆசௌசம் மனைவிக்கும் உண்டாம். ஆனால் மனைவியினுடைய ஆசௌசம் எல்லாவற்றிலும் கணவனுக்கு துடக்கு இல்லை. இது கணவனுடைய தொழில் சமய மற்றும் சமூக காரியங்கள் முட்டின்றி நடைபெற உதவுவதற்காகவே அன்றி ஆண்- பெண் சமத்துவ மீறல் அல்ல.

மேற்குறிப்பிட்ட உறவுமுறைக்குள் வராவிட்டாலும் பிறப்பு, இறப்புகளால் மன எழுச்சியும், மனவேதனையும் அடைவோருக்கு நெருங்கிய உறவினரைப் போலவே ஆசௌசம் உண்டு. இந்த ஆசௌச காலம் அவர்களுக்கிடையேயான உறவு இறுக்கத்தைப் பொறுத்து ஞாதிகள், சபிண்டர்கள், சமானோதகர்கள் ஆகியோருள் ஒருவருக்குரியதைப் போன்று அமையும்.

எவ்வளவு நெருங்கிய இரத்த சம்பந்தமான தாய்-மகன் உறவாயிருந்தாலும் உள்ளத்தால் பாசத்தொடர்பு இல்லாவிட்டால் அங்கு துடக்கு இல்லை என்று ஆகமங்கள் கூறுவதும் இதனாலேயே. இரத்த அல்லது திருமண சம்பந்தத்தால் நெருங்கிய உறவு இல்லாவிட்டாலும் மனம் துக்கித்து அழுதால் மரணத்துடக்கு உண்டு என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

நெருங்கிய உறவினர்களிடையே சண்டை, சச்சரவு, வழக்கு, விவாக முறிவுகள், கோப தாபங்கள் காரணமாக கொண்டாட்டம் இல்லாதிருந்தாலும் துடக்கு அவர்களுக்கும் உண்டு. இங்கு பிணைப்பு அவர்களுக்கிடையிலான கோப தாபங்களைக்கொண்டு அளக்கப்படுகின்றது. மனத்தினால் பிணைக்கப்பட்ட உறவு இல்லாமல் கோபதாபங்கள் எப்படி வரும் என்ற எதிர்மறை நியாயம் இங்கு பிரயோகிக்கப்படுகின்றது. இதனால்தான் திருமண வைபவங்களுக்கு வராத உறவுகள்கூட மரணச்சடங்கிற்கு வந்துவிடுகிறார்கள். (தொடரும்)

---

*துக்கத்தை சகிப்பவன் அதனை வென்றவன் ஆகிறான்*
*கடவுளை நேசிப்பவன் மனிதனை வெறுக்க மாட்டான்*

# வடமொழியில் திருவாசகம் முழுவதும்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

பன்னிரு திருமுறைகளுள் 12ஆம் திருமுறை பெரிய புராணம். கிபி 1148ஆம் ஆண்டளவில் சிதம்பரத்தில் சேக்கிழார் பெருமான் அரங்கேற்றிய நூல்.

கன்னடம், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் சேக்கிழார் எடுத்துக் கூறிய வரலாறுகள் மொழிபெயர்ப்பாயின.

முதலில் கிபி 1200ஆம் ஆண்டளவில். கன்னடத்தில் மொழிபெயர்ப்பாகி, அரிகர இரகளை என்ற பெயரில் வெளிவந்தது. அடுத்த 100 ஆண்டுகளில் புராதன சரித்திரம் என்ற பெயரில் மற்றொரு கன்னட மொழிபெயர்ப்பும் வந்தது. கடந்த நூற்றாண்டில் பேராசிரியர் கேடிலர் கன்னடத்துக்கு மொழிபெயர்த்த பெரிய புராணத்தைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

பசவ புராணம் என்ற பெயரில் தெலுங்கில் பெரிய புராணம் மொழிபெயர்ப்பாகி வெளிவந்தது. திருப்பதி வேங்கடவன் பல்கலைக்கழகப் பேராசிரியர் செயப்பிரகாசர் அதனைத் தமிழுக்கு மொழிபெயர்த்தார். படி ஒன்று என்னிடம் தந்தார்.

நாயக்கர் காலத்தில் காஞ்சிபுரத்தில் பெரிய புராணத்தை வடமொழியில் உபமன்யு பக்த விலாசம் என்ற பெயரில் மொழிபெயர்த்தவருக்கு மன்னன் ஒரு வீட்டை நன்கொடையாக்கிய கல்வெட்டுச் செய்தி ஏகாம்பரேச்சரர் கோயிலில் உண்டு.

மேலை நாட்டவர் முதன்முதல் மொழிபெயர்த்த நூல் திருவாசகம். அந்த நூலைப் பலர் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் அயல்மொழிகளுக்குத் திருவாசகம் முழுமையாக மொழிபெயர்ப்பாகவில்லை.

தருமபுரம் ஆதீனம் 26ஆவது குருமகா சந்நிதானத்தின்

ஆணையைத் தலைமேற்கொண்டு திருவாசகத்தை, தெலுங்கு (நூலாகியது), கன்னடம் (நூலாகியது), மலையாளம் (நூலாகியது), சிங்களம் (நூலாகியது), வடமொழி (நூலாகியது), மலாய், மியம்மா மொழிகளுக்கு மொழிபெயர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறேன்.

திருவாசகத்தை முழுமையாக வடமொழிக்கு மொழிபெயர்த்தவர் மேற்கு மாம்பலம் ச. கோதண்டராமன். தேவாரம் மின்னம்பல தளத்தைப் பார்த்துப் பயன்பெற்றுப் பாராட்டி எனக்கு அறிமுகமானவர் கோதண்டராமன். தமிழ், இந்தி, வடமொழிப் புலமையாளர்.

பன்னிரு திருமுறைகளின் வடமொழி மொழிபெயர்ப்புக்கான முழுச் செலவுகளையும் தருவதாக, 2011 கார்த்திகையில் என்னிடம் கூறி என்னை அப்பணியில் ஊக்குவித்தவர் கோயம்புத்தூர் ஆனைகட்டி, ஆரிய வித்தியாலய குருகுலம், பூஜ்யசிறீ தவத்திரு தயானந்த சரசுவதி சுவாமிகள் அவர்கள்.

20.5.14 காலை அவரைப் பார்க்கச் சென்றேன். சில காலமாகவே அவர் உடல்நிலை செம்மையாக இல்லை. நானும் இந்து மக்கள் கட்சித் தலைவர் அருச்சுனர் சம்பத்தும் ஆனைகட்டி ஆச்சிரமம் சென்றிருந்தோம். தன்னம்பிக்கையின் உருவமாக, செயற்களத்தின் நடுநாயகமாக, உற்சாகத்தின் ஊற்றாக சுவாமிகளைக் கண்டோம்.

என் மீது அன்பு சொரிந்தார். பாராட்டி மகிழ்ந்தார். தன் பக்கத்தில் அமரப் பணித்துப் பல செய்திகள் கூறினார். ச. கோதண்டராமன் மொழிபெயர்த்த திருவாசகத்தைப் பார்த்தார். 500 படிகள் அச்சிடுங்கள் என ஆணையிட்டார். அதற்கான செலவுத் தொகையைப் பத்து மணித்துளிகளில் என்னிடம் தந்தார்.

சேக்கிழார் அடிப்பொடி தி. ந. இராமச்சந்திரனாரின் திருமகன் இரமேசரையும் இல்லத்தாரையும் ஆச்சிரமத்தில் கண்டோம்.

---

எவரிடத்திலும் பற்று வைக்காமல் அன்பு கொள்ளல் நலம்.

# இந்திய திருத்தல யாத்திரை

## பாகம் - 3

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

ஐந்தாவது முறையாக இந்தியத் திருத்தல யாத்திரையை மேற்கொண்ட பேரவையின் திருக்கூட்டத்தினராகிய நாம் திருவண்ணாமலை திருக்கார்த்திகையை முன்னிட்டு கிரி வலம் வந்த நிகழ்ச்சியை கடந்த இதழில் எழுதியிருந்தேன். பல இலட்சம் பக்தர்களுடன் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்தநாம் மாலையில் நாம் தங்கியிருந்த மடத்திற்குத் திரும்பினோம். மடத்தின் மேற் தளத்தில் இருந்த படியே அண்ணாமலையில் ஒளிவிட்டுப் பிரகாசித்த திருக்கார்த்திகைத் தீபத்தைத் தரிசித்தோம். மக்களை உள்நிறுத்தி வழிபாடு செய்ய அனுமதிக்க முடியாத நிலையில் ஆலயம் மூடப்பட்டிருந்தது. திருத்தல யாத்திரை நிகழ்ச்சிகளில் பன்னிரு திருமுறையையும் முற்றோதுவது எங்களுக்கு முக்கிய நிகழ்வாக இருந்ததால் நாம் மறுநாள் அதிகாலையிலேயே அண்ணாமலையைவிட்டுப் புறப்பட்டு சிதம்பரத்தை நோக்கி பயணித்தோம்.

சிதம்பரத்தில் நாம் தங்கியிருந்த புண்ணிய நாச்சியார் மடத்தில் வந்து தங்கி இளைப்பாறியபின் 18-11-2013 பிற்பகல் திருவேட்களம் ஆலயத்திற்கு முதலாம் திருமுறைத் தொடர்ச்சியை முற்றோதுவதற்காகச் சென்றோம். சோழ நாட்டு வடகரைத் தலமாகிய திருவேட்களம் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை நகரில் அமைந்துள்ளது. அருச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளிய தலம் என்று இத்தலத்தைக் கூறுவர். திருஞானசம்பந்தப் பெருமான் இங்கு தங்கியிருந்து நாள் தோறும் சென்று சிதம்பர நடராசரைத் தரிசித்ததாக வரலாறு கூறுகிறது. சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். தேவரிஷி நாரதரால் வழிபடப்பெற்ற தலம்.

இத்தலத்தின் இறைவனின் பெயர் பாசுபதநாதர்.இறைவியின் பெயர் நல்லநாயகி. தலமரம் மூங்கில். தீர்த்தக்குளம் கோயிலின் எதிரில் உள்ளது. நாட்டுக் கோட்டை நகரத்தாருக்குச் சொந்த

---

முகஸ்துதி சொல்பவனும் கேட்பவனும் கெட்டவர்கள்

மான ஆலயம். கோயில் பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகிறது. கோயில் நன்கு பராமரிக்கப்பட்டுவருகிறது.

அன்றுமாலை இவ்வாலயத்தில் முதலாம் திருமுறையைப் பூர்த்தி செய்த பின் அவ்வாலயத்தில் வழமை போல ஒவ்வொரு திருமுறையும் பூர்த்தி செய்த பின் நாம் செய்யும் அபிசேக ஆராதனையை மேற்கொண்டோம். அன்று மாலை எமது இருப்பிடத்தில் இளைப்பாறிய பின் மறுநாள் 19-11-2013 அன்று இரண்டாம் திருமுறையை முற்றோதுவதற்காக திருப்பா திரிப்புலியூர் ஆலயத்திற்குச் சென்றோம். அகத்தியமாமுனிவர், உபமன்யுமுனிவர், வியாக்கிரபாதர், கங்காதேவி, அக்கினிதேவன் ஆகியோர் வழிபட்ட சிறப்பு மிக்க தலமாகும். இவர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் இன்றும் இவ்வாலயத்தில் உள்ளன.

திருநாவுக்கரசரை கல்லில் கட்டி கடலிலே இட்டபோது "சொற்றுணை வேதியன்" என்ற நமச்சிவாயப் பதிகத்தைப்பாடி அப்பர் பெருமான் கரை சேர்ந்தார். கல்லே தெப்பமாக மாறி வருணதேவன் தன் கைகளால் தாங்கி திருப்பாதிரிப்புலியூரில் கொண்டுவந்து சேர்த்தார் என அப்பர் பெருமானின் வரலாறு கூறுகிறது. அவ் இடம் இப்போது கரையேறவிட்ட குப்பம் - வண்டிப்பாளையம் என்று வழங்குகிறது. வண்டிப்பாளையத்தில் அப்பர் சுவாமி குளம் என்று கேட்டால் யாரும் சொல்லுவார்கள். குளத்திற்குப் பக்கத்தில் உள்ள ஓடைதான் கெடிலி நதியின் தொடர்ச்சியாக இருந்திருக்கின்றது.

தோன்றாத் துணையாகவிருந்து அப்பர் பெருமானுக்கு அருள் புரிந்ததால் இவ்வாலய மூர்த்திக்குத் தோன்றாத் துணைநாதர் என்ற பெயரும் உள்ளது. சம்பந்தர், அப்பர், அருணகிரிநாதர் ஆகியோரால் பாடல் பெற்ற தலமாகும். இவ் ஆலயத்தின் இறைவனின் பெயர் பாடலேஸ்வரர். இறைவியின் பெயர் பெரியநாயகி. தலமரம் பாதிரி மரம். தீர்த்தம் பிரம தீர்த்தம். இவ் ஆலயத்தில் உள்ள தல புராணத்தின் சிறப்புப்பாடல் ஒன்று பின்வருமாறு.

**உறையேறு சைவநெறி வளர்ந்தேறச்**
**சமணர் எலாம் உட்கி மாழ்கிப்**

புரையேறக் கண்டவர்கள் ஆனந்தக்
களிப்பேறப் புகழ் நா வேந்தை
கரையேற விட்டபிரான் ஒருபாகம் வளர்கருணைப்
பிராட்டியான தரையேறு புகழ் புவிசைப்
பெரியநாயகி சரணம் தலைமேற் கொள்வாம்.

பல சிறப்புப் பொருந்திய இவ் ஆலயம் ஒழுங்காக நிருவகிக்கப்படும் பெரிய ஆலயமும் ஆகும். சைவத் தமிழ் மக்களாகிய நாம் ஒருநாள் ஆகுதல் இவ்வாலயத்தைத் தரிசிக்க வேண்டியது அவசியமாகும். அன்றுமாலை திருமுறை முற்றோதிய பின்பு எமது இருப்பிடத்திற்குச் சென்று இளைப்பாறினோம். கனடாவில் குளிர்காலத்தில் யாத்திரையை மேற் கொண்ட நாம் தமிழகத்தில் ஆலய யாத்திரை செல்லும் போது நாம் காணும் இயற்கைக் காட்சிகளும் பறவைகளின் ரீங்காரமும் விலங்குகள் உலாவும் காட்சிகளும் எமது உள்ளத்திற்கு நிறைவைத் தந்தது. எமது தாயகத்தின் நினைவையும் ஊட்டியது. எமது சிந்தனைகள் எண்ணங்கள் எல்லாம் இளம் பிராய நினைவுகளுடன் அலைமோதியது.

மறுநாள் காலை 20-11-2013 இரண்டாம் திருமுறை மீதியையும், மூன்றாம் திருமுறையையும் படிப்பதற்காக திருவெண்காடு ஆலயத்திற்குச் சென்றோம். ஆதி சிதம்பரம் என்று அழைக்கப்படும் இவ் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் உடையது. பிரமாண்டமாகக் காட்சி தரும் இவ்வாலயம் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் பாடல் பெற்ற பெருமைக்குரிய தலமாகும். இத்தலத்திற்கு சுவேதவனம் என்றும் ஒரு பெயருண்டு. அக்னி தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் என சிறப்புப் பொருந்திய மூன்று தீர்த்தங்கள் உள்ளன. ஆலமரம், கொன்றைமரம், வில்வமரம் ஆகிய மூன்றும் தல விருச்சங்களாகவுள்ளன.

நவக்கிரக தலங்களில் புதனுக்குரிய தலமாகையால் இக் கோயிலில் புதன் சாநித்தியம் பெற்றுள்ளார். புதனை வலம் வந்து வழிபட்ட பின்னரே ஆலய தரிசனம் பூர்த்தியாகும்.

உட்பிரகாரத்தில் மேற்கே பிள்ளை இடுக்கி அம்மன் என்னும் அம்பாள் எழுந்தருளியுள்ளார். குழந்தை பிறக்காத பெண்கள் இவ் அம்மனை ஆராதித்தால் அப் பெண்களுக்குப் புத்திரப் பேறு உண்டாகும். குழந்தையை இடுப்பில் இடுக்கிவைத்திருக்கக் கூடிய பாக்கியத்தை அருளுவார் என்று ஆலய வரலாறு கூறுகிறது. இத் திருத்தலத்தின் தல புராணம் மிகவும் சிறப்புமிக்கதாகும். இவ்வாலயத்தில் இரண்டாம் திருமுறையைப் பூர்த்தி செய்த நாம் வழமைபோல திருமுறைகளைப் பூர்த்தி செய்த பின் செய்யும் அபிசேக ஆராதனைகளைச் செய்து வழிபட்டோம். தொடர்ந்து மூன்றாம் திருமுறையை இங்கு முற்றோதுவதற்கு ஆரம்பித்தோம்.

இத்தலத்தின் இறைவனின் பெயர் சுவேதாரண்யர். இறைவியின் பெயர் பிரம்ம வித்யாநாயகி. மூவகைத் தீர்த்தங்களும் சிறப்புப் பொருந்திய தீர்த்தங்களாகும். இத் தீர்த்தங்களில் நீராடினால் சகல பிணிகளும் நீங்கும் என்பது ஐதீகம். மாலை முற்றோதிய பின்பு எங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி நாம் யாவரும் ஓய்வெடுத்தோம்.

மறுநாள் 21-11-2013 ஆச்சாள்புரம் என்னும் ஆலயத்தை நோக்கி எங்கள் யாத்திரையைத் தொடர்ந்தோம். இவ் ஆலயம் ஞானசம்பந்தர் திருமணக்கோலத்துடன் சிவ ஜோதியில் கலந்த சிறப்புப் பொருந்திய தலமாகும். தன் திருமணத்திற்கு வந்தவர்களுடன் சிவஜோதியில் கலந்தமையால் இவ்வாலயத்திற்கு முக்தித் தலம் என்ற பெயருமுண்டு. இவ் ஆலயத்தின் இறைவனின் பெயர் சிவலோகத் தியாகேசர். இறைவியின் பெயர் வெண்ணீற்று உமைநங்கை. தலமரம் மாமரம் ஆகும். தீர்த்தம் பஞ்சாட்சர தீர்த்தம் உட்பட பதினொரு தீர்த்தங்கள் உள்ளன. பிரமன், முருகன், பிருகுமுனிவர், வசிட்டரிஷி, அத்ரி முனிவர், வியாச பகவான், மிருகண்டு முனிவர், அகத்தியர், யமதக்கினி ஆகியோர் வழிபட்ட சிறப்புக்குரிய தலமாகும். காக புசுண்டரிஷி என்ற மகா ஞானி முத்தி அடைந்த சிறப்புக்குரிய தலமாகும். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம். தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானது இத் திருக்கோயில்.

---

மரணத்தை வெல்வதாவது அதனை மகிழ்வுடன் ஏற்றலேயாம்.

இத்திருக்கோயிலில் ஆறுகால வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. முதல் மூன்று திருமுறைகளையும் பாடிய திருஞானசம்பந்தர் சிவ ஜோதியில் ஐக்கியமான இத்திருத்தலத்தில் மூன்றாம் திருமுறையைப் பூர்த்தி செய்து இன்றும் தன் திருவருள் சக்தியை வாரிவழங்கிக் கொண்டிருக்கும் ஞானசம்பந்தப் பெருமானின் திருவருட் கடாட்சத்தைப் பெறவேண்டும் என்பதற்காக மூன்றாம் திருமுறைப்பூர்த்தியின் அபிசேக ஆராதனையை இங்கே மேற்கொண்டோம். இவ் வாலயத்தில் ஞானசம்பந்தரின் பாடல்களை முற்றோதும் பொழுது சிவஜோதியில் ஞானசம்பந்தருடன் கலந்த அடியார்கள் ஞானசம்பந்தப் பெருமானுடன் தோன்றாத்துணையாக இருந்து எங்களுக்கு அருள் பாலித்தது போன்ற உணர்வு எழுந்தது. மனம் அமைதியாகவும், ஒரு நிலைப்பட்டும், பக்தி உணர்வுடனும் இருந்ததை அடியேன் உணர்ந்தேன். ஞானசம்பந்தக் குழந்தையின் அருட்சக்தியை உணர்ந்து என் உள்ளம் விம்மியது. அபிசேக ஆராதனையின் பொழுது நாம் சிவ புராணமும், சிவநாமசங்கீர்த்தனமும் சொல்லுவது வழமை. சொல்லிக் கொடுக்கும் பொழுது அடியேன் ஐந்தெழுத்தின் சாயுச்சியத்தை உணரக்கூடியதாகவும் முக்தித் தலமாகிய இறைவனின் அருள் ஒளியைத் தரிசிக்கக் கூடியதாகவும் இருந்தது. நாம் பெற்ற இன்பத்தை வையகமும் பெற வேண்டும் என்ற பெருநோக்கத்தால் இவற்றைக் குறிப்பிடுகிறேன்.

மறுநாள் திருவாப்பாடி ஆலயத்தில் அப்பர் சுவாமிகளின் நான்காம் திருமுறையை முற்றோதுவதாகத் தீர்மானித்து எமது இருப்பிடத்திற்கு இளைப்பாறுவதற்காகச் சென்றோம்.

(தொடரும்)

---

தூய உள்ளத்தில் வெறுப்புத்தன்மை வேர் விடுவதில்லை.
துன்பங்கள் வருவதால் மனிதன் சீர்திருத்த மடைகிறான்.
எண்ணத்துக்குத் தக்கதாக வாழ்வு அமைகிறது.
பொறாமை மனித மேன்மைகளைத் தேய்த்து விடுகிறது.
பற்றற்றவனை வினைத்தளைகள் ஒன்றும் செய்வதில்லை
இயற்கையை மீறி எவரும் நடக்க முடியாது.
உடல் பழுது பட்டாலும் உள்ளம் தெளிவாதல் வேண்டும்

# ஓட்டைப்பானை

(திருவருட் கட்டுரை)

பகுதி 1

பசுந்தீவு கோவிந்தன்

பூவுலகில் ஞானிகள், யோகிகள், சித்தர்கள் போன்ற துறவிகளைத் தவிர ஏனைய சாதாரண மக்கள் இறைவனுடைய அருளைப் பெற்று, அதன் துணைகொண்டு சுகமான லௌகீக வாழ்வை அனுபவிக்க விரும்புகின்றார்கள் அதற்காக அவர்கள் முயற்சி பண்ணிக்கொண்டும் இருக்கின்றார்கள் என்றால், அதை யாரும் மறுப்பதற்கில்லை. ஞானிகள், யோகிகள், சித்தர்கள் போன்ற துறவிகள் இறைவனின் அருளை வேண்டி நிற்பதன் நோக்கம் சாதாரண மக்கள் வேண்டி நிற்கும் நோக்கத்திலிருந்து வேறுபட்டது என்பதை நாம் அறிவோம். சாதாரண மக்கள் இப்பூவுலக வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய சுகபோகங்களை அனுபவித்து மகிழ்வுடன் வாழ்வதற்கு இறைவனுடைய அருளை வேண்டி நிற்பவர்கள். வேறு வார்த்தையில் சொன்னால் பூவுலகில் கிடைக்கக்கூடிய சிற்றின்ப வாழ்க்கையில் தாம் எதிர்பார்ப்பனவற்றைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வதற்கு இறையருளை வேண்டி நிற்பவர்கள். இவர்களைப் பற்றியதாகவே இக்கட்டுரை அமையவிருக்கின்றது.

சாதாரண மக்கள் தமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் மற்றையவர்களுடைய வழிகாட்டலுக்கும் ஏற்ப பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றிச் செயற்பாடுகளை மேற்கொண்டு இறையருளைப் பெறுவதற்கு முயன்று வருவது கண்கூடாகும். இவர்களுடைய முயற்சிகள் பல்வேறுபட்டவை ஆகும். தெய்வீக அருளைப் பெற்றுக் கொள்ளுவதற்காகச் சிலர் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்கின்றார்கள். வேறுசிலர் பெறுமதிமிக்க நேரத்தையும் காலத்தையும் செலவிடுகிறார்கள். இன்னும் சிலர் பிரதட்டை, அடியழித்தல், காவடி எடுத்தல், விரத அனுட்டானங்கள் போன்றவற்றை மேற்கொண்டு உடலை வருத்திக் கொள்ளுகின்றார்கள். மற்றும் சிலர் தொண்டர்களாக ஊழியம் செய்கின்றார்கள். மிகுதிப்பேர் சாதாரண பக்தர்களாக

---

*சீலங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பொறுமை*

*நாம் பாடுபட்டுத் தேடியதே நமது பொருளாகும்*

வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். எல்லாவகையினரதும் அடிப்படை நோக்கம் இறையருளைப் பெற்று இப்பூவுலகில் இன்புற்று வாழவேண்டும் என்பதேயாகும். அதாவது, துன்பங்கள், துயரங்கள், இழப்புக்களிலிருந்து விடுபட்டு மகிழ்வுடன் வாழவேண்டும் என்பதாகும். இது சாதாரண மக்களுடைய இயல்பாகும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

தெய்வீக அருளைப் பெறுவதற்குப் பலவாறு மக்கள் முயற்சிக்கும் பொழுது, எல்லோருக்கும் அவர்கள் எதிர்பார்க்கும் அருள் கிடைக்கின்றதா? என்று கேட்டால், இல்லை என்ற பதிலே வருகின்றது. இறைவன் அருளைப் பொழிந்து கொண்டிருப்பவர். அவர் அருளைப் பொழியும்பொழுது பாகுபாடு காட்டுவதே இல்லை. காரணம், அவருக்கு எவரிடமும் விருப்போ வெறுப்போ கிடையாது. இறைவன் எல்லோரையும் படைத்தவர். எல்லோருக்கும் தாயுமாய்த் தந்தையுமாய் இருப்பவர், எனவே பாகுபாடு காட்டவேமாட்டார். மழை பொழியும்பொழுது, அது பாகுபாடு காட்டிப்பொழிவதில்லை. பொழியும் மழைநீரைப் பெற்று அதைப் பயன்படுத்தும் விதத்தினாலே விளையும் பலாபலன்தான் வேறுபடுகின்றது. பலாபலன் வேறுபடுவதற்குப் பொழிந்துதள்ளிய மழை காரணமல்ல, மழை நீரைப் பயன்படுத்திய மனிதன்தான் காரணம். பொழியும் மழைநீரைத் தேக்கிக் குளமாக்கி, அதைப் பயன்படுத்திப் பயிர் செய்யும் புத்திசாலியும் இருக்கின்றான். பொழியும் மழைநீர் முழுவதையும் கட்டுப்பாடின்றி ஓடிக் கடலுடன் கலக்கவிட்டு ஏமாந்து நிற்கும் ஏமாளியும் இருக்கிறான்.

இறைவன் மழை போன்று எந்தவித பாகுபாடுமின்றி அருளைப் பொழிந்துகொண்டே இருக்கிறான். இறைவன் இடைவிடாது பொழிந்து கொண்டிருக்கும் அருளை எல்லோராலும் ஒரே சீராக ஏந்திக்கொள்ள முடிவதில்லை. இதன் காரணமாய்த் தான் அருளைப் பெற்றுக் கொள்வதில் வேறுபாடு ஏற்படுகின்றது. இதற்கு அருளைப் பொழியும் இறைவன் பொறுப்பல்ல, ஏந்திக்கொள்ளும் மனிதன்தான் பொறுப்பு. பாகுபாடான முறையில் இறைவன் அருளை அளிக்கின்றானே! என்று இறைவனை நொந்துகொள்வது எமது அறியாமை. இறையருளை வேண்டி நிற்கும் மனிதன், இறைவன் அதைப் பொழியும்பொழுது தனக்கு

---

இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்
மனத்தூய்மை பெற்றவர் கடவுளைக் காணவல்லவர்

வேண்டியதை ஏன் ஏந்திக்கொள்வதில்லை? அதற்கு அவனது அறியாமையும் இயலாமையுந்தான் காரணம் ஆகும். மனிதன் தனது அறியாமையையும் இயலாமையையும் போக்குவதை விட்டு, இறைவனை ஓரவஞ்சகன், ஓரக்கண்ணன் என்று திட்டித் தீர்ப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. அது மனிதனது இயலாமையையும், அறியாமையையும் மேலும் வெளிப்படுத்துவதாகவே அமையும்.

ஓர் ஊரில் ஒரு செய்தி திடீரென்று பரவியது. அதாவது, அவ்வூரின் ஓர் இடத்தில் அமிர்தம் பொழிந்து கொண்டிருக்கின்றது என்பதாகும். அவ்வூர் மக்கள் எல்லோரும் கையில் கிடைத்த பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அவ்விடம் நோக்கி ஓடினர். பொழிந்து கொண்டிருந்த அமிர்தத்தை எல்லோரும் தாம் எடுத்துச் சென்ற பாத்திரங்களில் ஏந்திக்கொண்டனர். பலருடைய பாத்திரங்களில் இருந்த அமிர்தம் சில நிமிடங்களிலேயே அற்றுப்போய்விட்டது. வேறு பலருடைய பாத்திரங்களில் இருந்த அமிர்தம் வீடு செல்லும் பாதி வழியிலேயே அற்றுப் போய்விட்டது. இன்னும் பலருடைய பாத்திரங்களில் இருந்த அமிர்தம் வீட்டில் வைத்தபின் மறுநாள் அற்றுப்போய்விட்டது. சிலருடைய பாத்திரங்களில் மட்டும் அமிர்தம் தங்கியிருந்தது. பலருடைய பாத்திரங்களில் இருந்த அமிர்தம் அற்றுப்போனதற்கான காரணம் பாத்திரங்களில் ஓட்டை இருந்தமை ஆகும். பெரிய ஓட்டை கொண்ட பாத்திரங்களில் பெற்ற அமிர்தம் சில நிமிடங்களிலேயே அற்றுப்போய்விட்டது. சிறிய ஓட்டை கொண்ட பாத்திரங்களில் பெற்ற அமிர்தம், வீடு திரும்பியபாதிவழியிலேயே அற்றுப்போய்விட்டது. வெடிப்பைக்கொண்ட பாத்திரங்களில் பெற்ற அமிர்தம் அன்றிரவுடன் அற்றுப்போய்விட்டது. சிலருடைய ஓட்டையற்ற பாத்திரங்களில் மட்டும் அமிர்தம் தங்கியிருந்தது. ஓட்டை இருந்தும் அதை அறியாதிருந்தமைக்கான காரணம் அவர்களின் அறியாமையே ஆகும். அறியாமை என்னும் இருளில் மனிதன் இருக்கும் வரை ஓட்டை இருப்பதை அறிய முடிவதில்லை.

தெய்வீக அருளைப் பெறுவதற்கு இறைவனிடம் வரும் ஒவ்வொரு மனிதனும் இறைவனைப் பொறுத்தவரை ஒவ்வொரு பாத்திரம் ஆகும். இறைவன் பாகுபாடின்றி அருளைப் பொழிந்து

கொண்டேயிருக்கிறான். அதை ஏந்தித் தமக்குள்ளே சேர்த்து வைத்துப் பயன் அடைவதென்பது ஒவ்வொரு மனிதனையும் பொறுத்தது. இறைவன் ஒருபோதும் பாகுபாடு காட்டுவதில்லை என்ற உண்மையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இறைவன் பொழிந்து கொண்டிருக்கும் அருள், மனிதனைத் தவிர்ந்த, மற்றைய ஜீவராசிகளுக்குச் சமமாகக் கிடைக்கின்றது. அதனால் அவையாவும் இறைவன் வகுத்த வழியிலேயே வாழுகின்றன. மனிதன் மட்டுந்தான் பாகுபாடு என்று சொல்லி அலட்டிக் கொள்கிறான். காரணம், மற்றைய ஜீவராசிகள் அனைத்தையும் உடலையும் உயிரையும் கொண்டு படைத்த இறைவன், மனிதனுக்கு மட்டும் உடல், உயிர்ஆகிய இரண்டுடன் 'மனம்' என்ற ஒன்றையும் கொடுத்துள்ளான். இதுதான் இறைவன் இழைத்த தவறு, தவறு என்று சொல்லமுடியாது. இறைவன் ஒருபோதும் தவறு இழைப்பதில்லை. மற்றைய ஜீவராசிகள் எல்லாம் தத்தமது கன்ம வினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக மட்டும் எடுத்த பிறப்புக்கள் ஆகும். மனிதன் மட்டுந்தான் இறைவனை அடைவதற்கு எடுத்த பிறவியாவான். மனிதப் பிறவியைப் பயன்படுத்தி இறைவனை அடைய வேண்டும் என்பதற்காக இறைவன் மனிதனுக்கு மனதைக் கொடுத்தான். இந்த அடிப்படையிற் தான்,

'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே' என்றும், 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றும் மகான்கள் கூறிவைத்துள்ளார்கள். ஆனால், மனிதன் இறைவனின் எதிர்பார்க்கைக்கு மாறாக மனதைக் கொண்டு ஏதேதோ அநியாயங்கள், அதர்மங்களை எல்லாம் பண்ணுகிறான். அறியாமையில் மூழ்கியுள்ள மனிதன் தனக்குத்தானே ஓட்டைகளைப் போட்டுக்கொண்டு நிற்கிறான். இறைவன் பொழியும் அருள் முழுவதும் ஓட்டைகளால் வெளியேறி விடுகின்றது என்பதை அறியாத மனிதன், இறுதியில் இறைவனைக் குறைகூறுகிறான், இறைவனை நிந்திக்கிறான், கடைசிக் கட்டத்தில் இறைவன் என்ற ஒன்று இல்லவேயில்லை என்று உளறுகிறான். இது மனிதன் தனக்குத்தானே வரவழைத்துக் கொண்ட அவலநிலை ஆகும். இதற்கு இறைவன் பொறுப்பல்ல.

(தொடரும்)

---

ஆசையை வென்றவன் நிறைந்த செல்வம் உடையவன்

# வைராக்கியத்தின் சிகரம் வாகீசர்

நா. க. சிவராமலிங்கம்

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் வேளாண் குடியில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் புத்திரனாகப் பிறந்தவர் மருள் நீக்கியார். இதுதான் திருநாவுக்கரசு நாயனாரின் இயற்பெயர். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மருள் நீங்க மகத்தான சேவை ஆற்றப் போகின்றார் என்ற கருத்தினை அவரது பெயரில் உள்ளடங்கி இருப்பதைக் காணலாம். திலகவதியார் இவரது தமக்கையாராகும். முற்பிறப்பில் வாகீச முனிவராக இருந்து சாபத்தின் காரணமாக புகழனாருக்கும் மாதினியாருக்கும் இவர் மகனாகப் பிறந்தார் எனக் கூறப்படுகிறது. மணம் பேசி இருந்த மணாளனான கலிப்பகையார் என்னும் படைவீரர் மரித்ததினால் வாழ்வில் சலிப்புற்று உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பிய திலகவதியார் மருள்நீக்கியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி உயிர் வாழ ஒருப்பட்டார்.

'தம்பியார் உளராக வேண்டும்' என்ற தமக்கையாரின் தியாகத்தினால்தான் திருநாவுக்கரசர் என்ற நன்முத்து சைவ உலகிற்குக் கிடைத்தது. திலகவதியார் சகோதர பாசத்திற்கு நல்ல உதாரணமாக விளங்கினார்.

ஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் இவர்களிலிருந்து மாறுபட்டவர், வேறுபட்டவர் திருநாவுக்கரசு நாயனார். இவர்கள் மூவரும் பிராமண குலத்தினர். திருநாவுக்கரசர் வேளாண் மரபினர். சம்பந்தர் பதினாறு வயதிலும், சுந்தரர் பதினெட்டு வயதிலும், மணிவாசகர் முப்பத்திரண்டு வயதிலும் முத்தியடைந்தனர். ஆனால் திருநாவுக்கரசர் எண்பத்தொரு வயதுவரை இவ்வுலகில் வாழ்ந்து இறைபதம் எய்தினார். நீண்ட நாட்கள் வாழ்ந்தமையாலும் பழுத்த பழமாக இருந்தமையாலும் முதியவர் ஆனமையாலும் அப்பர் என அழைக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் தனது கருத்துக்களை பிறர் மனங்களில் நிலை பெறச் செய்தமையினாலும் அதாவது அப்பியதினாலும் அப்பர் என அழைக்கப்பட்டிருக்கலாம். அப்பர் என்ற பெயர் ஞானசம்பந்தரால் வழங்கப்பட்டதாகும். இறைவன்மீது பக்திச் சுவை சொட்டும் பாடல்களைப் பாடியதனால் நாவுக்கு அரசன் என்று இறைவனாலேயே பின்னர் நாமம் சூட்டப்பெற்றார்.

இறைபற்று மேலீட்டில் பல நற்காரியங்களை ஆற்றிய மருள்நீக்கியார் பற்றற்று உலக வாழ்க்கையை விட்டு விலகி வாழ சமண சமயமே சிறந்தது என உணர்ந்தார். எனவே பாடலிபுரம் சென்று சமண சமயத்தில் சேர்ந்து தருமசேனர் ஆனார். தம்பியார் சைவ சமயத்தைத் துறந்து சமண சமயத்தில் புகுந்ததினால் வேதனையுற்ற திலகவதியார் இறைவனை இறைஞ்சினார். இறைவன் தருமசேனருக்கு சூலை நோயைக் கொடுத்தருளினார். சூலை நோயைத் தணிப்பதற்கு சமணர் களுடைய கைவண்ணம் பலிக்காததினால் அவர் இரவோடு இரவாக தமக்கையாரை வந்தடைந்தார். திலகவதியார் அவருக்கு திருமந்திரத்தை உச்சரித்து திருவெண்ணீற்றைக் கொடுத்தார். திருநீற்றினை மேனி முழுவதும் பூசினார். திருநீற்றின் வீறினால் அவர் தனது நோயிலிருந்து ஆறுதல் பெற்றுத் தேறுதல் அடைந்தார். இறைவனது பெருங்கருணையை வியந்து திருப்பதிகம் பாடினார்.


மீண்டும் சைவசமயம் புகுந்த நாவரசருக்கு சமண அரசன் பலவிதமான கொடுமைகளைச் செய்தான். நீற்றறையுள் பூட்டி வைத்தான. நஞ்சு கலந்த பாற் சோற்றை உண்பித்தான். மதம் கொண்ட யானையை ஏவிவிட்டான். கல்லோடு கட்டிக் கடலிலே போட்டான். ஒன்றினாலும் அவருக்கு ஊறு ஏற்படவில்லை. புடம் போட்ட பொன் போலானார். அவரது உள்ளத்தின் உறுதியினால் இந்நிலை அவருக்கு ஏற்பட்டது எனலாம். அப்பரது உள்ளத்தின் உறுதியினால் திருவையாறு தென் கைலாய மாயிற்று. தனது உள்ளத்தின் உறுதிப்பாட்டை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார் அவர்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே.

**45ஆம் பக்கம் பார்க்க**

## இந்துசமயப் பேரவைச் செய்திகள்

### செல்லப்பா சுவாமிகளின் குருபூசை



1-4-2014 செவ்வாய்க்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் மாலை வரை ஆத்மஜோதி இல்லத்தில் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நடைபெற்றது. யோகர்சுவாமிகள் செல்லப்பா சுவாமிகள்பற்றிப் பாடிய நற்சிந்தனைப் பாடல்கள் ஓதப்பெற்றன. நண்பகல் சிவ பூசையுடன் செல்லப்பா சுவாமிகளின் திரு உருவப்படத்திற்கு திருவடி வணக்கம் செலுத்தப்பெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பக்தியுடன் பங்குபற்றினர்.

### திருப்புகழ் முற்றோதல்



22-2-2014 ஆரம்பிக்கப் பெற்ற திருப்புகழ் முற்றோதல் 6-4-2014 ஞாயிற்றுக்கிழமை பூர்த்தி செய்யப்பெற்றது. வாரந்தோறும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்புகழ் முற்றோதல் நடைபெற்றது.

### சிவயோக சுவாமிகளின் 50 ஆவது மகா குருபூசை

9-4-2014 புதன்கிழமை சிவயோகசுவாமிகளின் வருடாந்தக் குருபூசை 16வது வருடமாக நற்சிந்தனை முற்றோதிக் கொண்டாடப்பெற்றது. காலை 7:00 மணிக்கு தொடங்கிய நற்சிந்தனை முற்றோதல் இரவு 10:00 மணிக்கு நிறைவு பெற்றது.



நண்பகல் சிவபூசையும், சிவயோக சுவாமிகளின் திரு உருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப் பெற்றது. நண்பகல் அன்னதானமும் வழங்கப்பெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினரும் யோகர் சுவாமிகளின் பக்தர்களும் பக்தியுடன் கலந்து கொண்டனர்.

### பங்குனி உத்திர வழிபாடு

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு 12-04-2014 சனிக்கிழமை

---

அன்பில் நிலைத்திருப்பவன் அச்சத்தை அறியான்



காலை 8:30 மணி தொடக்கம் திருவாசகம் முற்றோதல் ஆத்மஜோதி இல்லத்தில் பேரவையின் திருக்கூட்டத்தினரால் நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் அன்னதானமும் நடைபெற்றது.

**சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் வருகையும் சிவதொண்டன் செல்லத்துரை சுவாமிகளின் குருபூசையும்**

சிவயோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசையை முன்னிட்டு போதிநாத வேலன் சுவாமிகள் (காவாய் சைவ ஆதீன முதல்வர்) கனடாவிற்கு வருகை தந்தார். ஆத்மஜோதி இல்லத்திற்கும் சுவாமிகள் 13-4-2014 காலை 8:40 மணியளவில் வருகைதந்திருந்தார். கூடியிருந்த பக்தர்கள் யாவரும் அவருடைய தரிசனத்தைப் பெற்றனர். சுவாமிகள் அருளுரையும் வழங்கினார். அவரின் வருகையினால் பேரவையினர் பெரும்பேறு பெற்றனர்.



அன்றைய தினம் சிவயோக சுவாமிகளின் முதன்மைச் சீடர்களில் ஒருவராகிய **செல்லத்துரை சுவாமிகளின்** குருபூசை தினமாகையால் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை ஓதப்பட்டும் திருமுறைகள் ஓதியும் வழிபாடு செய்தனர். நண்பகல் சிவபூசையுடன் செல்லத்துரை சுவாமிகளின் திரு உருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.



**இரமண பகவானின் குருபூசையும் சித்திரை வருடப்பிறப்பு வழிபாடும்**



14-04-2014 திங்கட்கிழமை இரமண பகவானின் குருபூசையை முன்னிட்டு அவர் பாடிய அட்சர மணிமாலை படித்து திருமுறை பஜனை வழிபாடும் நிகழ்த்தப்பெற்றது.

அன்றைய தினம் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு வழிபாடும் நிகழ்த்தப்பெற்றது

**15 ஆவது வருடமாக பன்னிரு திருமுறை முற்றோதல்**

இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினரால் 15ஆவது வருடமாகத் திருமுறை முற்றோதல் 19-4-2014 சனிக்கிழமை ஆத்மஜோதி இல்லத்தில் ஆரம்பமாகியது. வாரந்தோறும் சனிக்கிழமையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. யூன் மாதம் தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் முற்றோதப் பெறுகின்றது பேரவையின் திருக்கூட்டத்தினரும் திருமுறை ஆர்வலர்களும் ஆர்வமுடன் பங்குபற்றி வருகின்றனர்.


**நடேசர் அபிசேகம்**



22-4-2014 செவ்வாய்க்கிழமை காலை நடேசர் அபிசேகத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல் நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் நடேசர் அபிசேக

ஆராதனையும் அன்னதானமும் நடைபெற்றது.

**திருநாவுக்கரசுநாயனார் குருபூசை**



திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசையை முன்னிட்டு 24-4-2014 வியாழக்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் அவர் பாடிய 4ம் 5ம் 6ம் திருமுறை களிலிருந்து தெரிந்தெடுத்த பாடல்கள் ஓதப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.

**சித்திரைப் பூரணை வழிபாடு**



சித்திராப் பூரணையை முன்னிட்டு சித்திர குப்த நாயனார் இயற்றிய சித்திர குப்த நாயனார் கதை படித்து வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் திருக்கூட்டத் தினரின் தாய்மாருக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நிகழ்த்தப் பெற்றது.

**மார்க்கண்டு சுவாமிகளின் குருபூசை**



கைதடியில் வாழ்ந்து அருளாட்சி புரிந்த மார்க்கண்டு சுவாமிகளின் குருபூசை 27-5-2014 செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் மாலை 4:00 வரை நடைபெற்றது. யோகர் சுவாமிகளின் தெரிந்தெடுக்கப்பெற்ற நற்சிந்தனைப் பாடல்கள் பக்தியுடன் பாடப்பெற்றது. நண்பகல் சிவபூசையும், சுவாமிகளின் திருவுருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.

**சேக்கிழார் குருபூசை**



திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமானின் குருபூசை 2-6-2014 திங்கட்கிழமை காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகியது.

திருத்தொண்டர் புராணத்தில் இருந்து தெரிந்தெடுத்த பாடல்கள் ஓதப்பெற்றது. நண்பகல் சிவபூசையும் சேக்கிழார் பெருமானின்

திருவுருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.

## வைகாசி விசாக வழிபாடு



10-06-2014 வைகாசி விசாகத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதி வழிபாடு நிகழ்த்தப் பெற்றது.

பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் பிறந்த நட்சத்திரம் ஆகையால் அவரை உள் அன்புடன் நினைந்து வழிபாடு இயற்றப்பட்டது. நண்பகல் சிவபூசையும் பக்தியுடன் இடம்பெற்றது.

## திருஞானசம்பந்தர் குருபூசை



திருஞானசம்பந்தர் குருபூசை 13-6-2014 வெள்ளிக்கிழமை காலை 8:30 மணியிலிருந்து பக்தியுடன் ஆரம்பமாகியது. சுவாமிகள் பாடிய 1ம், 2ம், 3ம் திருமுறைகளிலிருந்து தெரிந்தெடுத்த பாடல்கள் ஓதப்பெற்று நண்பகல் சிலபூசையும் திருஞான சம்பந்த நாயனாரின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது.

---

## 40ஆம் பக்கத் தொடர்ச்சி

சமணச் சேற்றில் உற்று உழன்ற தனக்கு இறைவன்மீது பற்று மேலிட அற்புதம் விளைவிக்கும்படி வேண்ட இறைவன் அவர் தோள்மீது சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறித்தருளினார். ஞானசம்பந்தரும் நாவரசரும் சமகாலத்தினர். ஞானசம்பந்தரின் பல்லக்கினைத் தாங்கும் பேற்றினை நாவரசர் பெற்றார். அப்பர் எங்குற்றார் என்று ஞானக்குழந்தை வினவ அடியேன் இங்குற்றேன் என்றார். பணியுமாம் பெருமை என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் நாவரசர். உழவாரப் படையாளியாகக் காட்சி தரும் அப்பர் என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற இலட்சியத்துடன் வாழ்ந்தவர். ஆண்டவன் மீது பூண்டிருந்த பேரன்பினால் திருத்தாண்டகம் பாடி வேண்டுதல் செய்தவரை ஈண்டு நாமும் ஏற்றிப் போற்றுவோம்.

---

*கீழ்ப்படியத் தெரிந்தவனே ஆளவல்லவன் ஆகிறான்*

*முயற்சிக்கு ஏற்றவாறு மனிதன் முன்னேற்றம் அடைகிறான்*





தூய அன்பு ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை.
மனப்பண்பாடே வாழ்க்கையின் முக்கிய நோக்கம்.
தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்
கடவுட் சிந்தனை இருந்தால் பாவம் நுழையாது.

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

**திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்**

✷ நற்குண நற்செயல்களைத் தமதாக்கிக் கொள்ளும் பருவமே மாணவப் பருவமாகும்

✷ வேத வியாசர் வேத உண்மைகளைச் சாதாரண மக்களுக்கு விளக்குவதற்காக கதை சொல்லும் முறையை கையாண்டுள்ளர்

✷ சொல்லும் கதைகளை இனிமையாகச் சொல்லவும் வேண்டும் அந்தக் கதைகளைக் கற்கும் பிஞ்சு நெஞ்சங்களில் நல்லறிவுச் சுடர்களை ஏற்றவும் வேண்டும்

✷ நல்லறிவு பெற்ற மக்களே நல்லவர்களாக விளங்குவார்கள். நல்லவர்கள் வாழும் நாடே நல்ல நாடாக விளங்கும்

✷ இன்றைய மாணவச் செல்வங்களே வருங்கால உலகம் என்பதை நம்மவர்கள் உணர வேண்டும்

✷ நாம் எமக்குள்ளே கடவுளை வைத்துக் கொண்டு உலகம் எல்லாம் தேடுகின்றோம்

✷ பக்தி செய்தால் கடவுளை உணரலாம். உணர்ந்தால் கடவுளைக் காணலாம்.

✷ ஒவ்வொரு செக்கனும் நாம் இறந்து கொண்டிருக்கின்றோம். இதனை நாம் ஒவ்வொரு செயலிலும் நினைத்துக் கொண்டால் தீய எண்ணம் மனதில் புகாது. எப்போதும் மகிழ்வுடன் இருப்போம்.

✷ உலகம் முழுவதும் ஆண்டவன் நிறைந்துள்ளான். உலகத்தைப் பார்த்தால் ஆண்டவன் மறைந்து விடுவான். ஆண்டவனைப் பார்த்தால் உலகம் மறைந்து விடுகிறது.

* ஆத்ம சமர்ப்பணமே அன்பின் உச்ச நிலை கொண்ட பூசையாகும்.

* மக்களின் மனக்கோட்டைகள் ஒன்று நினைக்க இன்னொன்றாய் முடியும்.

* இறைவனின் பெருங்கருணையாலே இவ் உலகம் இயங்குகிறது. நாம் எண்ணியபடி எதுவும் நடக்காது.

* வீட்டிற்கு வந்த விருந்தாளியை முறையாக உபசரிக்காவிட்டால் அவருடைய பாவத்தில் நாம் அரைவாசியை ஏற்றுக் கொள்கின்றோம் என வேதங்கள் கூறுகின்றன.

* இயற்கை தியாகத்தை தினமும் எமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. ஆனால் நாமோ அதை உணர்கிறோமில்லை. உப்பு தான் அழிந்து சுவையைக் கொடுக்கிறது. ஊதுபத்தி தான் அழிந்து சுகந்தத்தைக் கொடுக்கிறது. சந்தணக்கட்டை தான் தேய்ந்து மணம் கமழ்கிறது. மேகம் தான் அழிந்து மழையைப் பொழிகிறது. பகுத்தறிவுடைய மனித வாழ்வும் இப்படித் தியாக வாழ்வாய் பரிணமிக்க வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும்.

* இவ்வாழ்க்கை கடவுளை வணங்குவதற்காகவே ஏற்பட்டது. பிராணன் மிக விலை. உயர்ந்தது. காலமோ மிக மிக உயர்ந்தது. செபம், தியானம், பிரார்த்தனை, நாமசங்கீர்த்தனம், மந்திரம் எழுதுதல், நிட்காமிய சேவை, ஆத்மீக நூல்களை பாராயணம் செய்தல் ஆகிய ஆத்மீக சாதனைகளில் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பிரயோசனப் படுத்துங்கள்.

* யோகம் என்பது பூரண வாழ்க்கை

* உடல், உள்ளம், ஆத்மா ஆகிய மூன்றையும் ஒருங்கே மேம்பாடு அடையச் செய்வதே யோகத்தின் குறிக்கோளாகும்

Trillium Mortgage

**Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்**

**Thulasitharan Muthu**
**(Thulasi)**
**Mortgage Agent**

# Direct: 416-839-3444

Email: thulasi17@hotmail.com

200 Consumers Rd., Suite 301
Toronto, ON. M2J 4R4
Brokerase Licence # 11396

# குடும்பப் பல் வைத்தியர்

அவசர பல் சிகிச்சை நிலையம்

முரசு கரைதலை நிறுத்தல்
பல் வேர் அடைத்தல்
அழகுபடுத்தும் பல் சிகிச்சை
முதியோர் பல் பராமரிப்பு
கிளிப் போடுதல்
பற்களை வெண்மையாக்கல்
ஞானப்பல் எடுத்தல்

கட்டுப்பற்கள்
நிரந்தரமான செயற்கைப்பற்கள்
பவுண்பல் கட்டுதல்
குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
வாய் துர்நாற்றம் அகற்றல்
பல் அடைத்தல்
IMPLANT



பிரபல பல் வைத்திய நிபுணர்

## DR. ஆதிகணபதி சோமசுந்தரம்

**416-750-9969**

**2191 Warden Ave.(Warden & Sheppard)**

**OPEN 7 DAYS A WEEK**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT 109-110**

**TEL: 416-269-1994**
**416-807-7468**